நாணயக் கொள்கை அறிக்கை

2025 ஓகத்து

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

நாணயக் கொள்கை அறிக்கையானது ஆண்டிற்கு இரு முறை வெளியிடப்படும். இவ்வறிக்கையின் உள்ளடக்கம், 2025 யூலை 23 அன்று மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை அறிவிப்புடன் முடிவுறுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 2025 யூலையில் உள்ளவாறான நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள முக்கியமான தரவுகளை அடிப்படையாகக்கொண்டு அமைந்துள்ளது.

© இலங்கை மத்திய வங்கி

ISBN 978-624-6764-10-4

2025 ஓகத்து 15

உள்ளடக்க அட்டவணை

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு 4

சுருக்க அறிக்கை 6

1. நாணயக் கொள்கைச் சுருக்கம் 8

2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு 10

2.1. அடிப்படை எதிர்வுகூறல் 10

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள் 10

சிறப்புக்குறிப்பு அ: உத்வேகம் மற்றும் தளத் தாக்கத்தினை விளங்கிக்கொள்ளல் 14

உண்மை பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் 15

2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள் 17

உலகளாவிய சூழல் 17

இறைப் பாதை 18

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு 18

2.3. அடிப்படை எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள் 18

பணவீக்க எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள் 18

பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள் 19

2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு 20

நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள் 20

பணவீக்கப் பாதை 21

3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள் 23

3.1. பணவீக்கம் 23

சிறப்புக்குறிப்பு ஆ: பணிகள் பணவீக்கத்தைப் புரிந்துகொள்ளல்: இது முக்கியம்பெறுவது ஏன்? 26

3.2. உண்மைத் துறை 29

3.3. நாணயத் துறை 32

வட்டி வீதங்கள் 32

உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை 34

உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல் 35

3.4. வெளிநாட்டுத் துறை 37

சென்மதி நிலுவை 37

செலாவணி வீதம் 40

ஒதுக்குச் சொத்துக்கள் 41

3.5. இறைத் துறை 41

3.6. நிதியியல் துறை 43

3.7. உலகளாவிய அபிவிருத்திகள் 45

இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைவதும் பேணுவதும் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. தாழ்ந்த மற்றும் நிலையான பணவீக்க மட்டத்தில் அதாவது, விலை உறுதிப்பாட்டினைப் பேணுவதன் மூலம் மத்திய வங்கியானது நீண்ட கால பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்குப் பங்களிப்புச்செய்கின்றது. அதன்மூலம், இது பொதுமக்களின் பொருளாதார மற்றும் நிதியியல் நலனோம்புகைக்கு ஆதரவளிக்கின்றது.

மத்திய வங்கியானது அதன் முதன்மைக் குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினைப் பேணுதலினை அடையும் பொருட்டு நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்திற்கமைய, நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையினை உருவாக்குவதற்கும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீத முறைமையொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் நாணயக் கொள்கைச் சபை[1] பொறுப்பாகவுள்ளது. இக்கட்டமைப்பானது நிதியமைச்சரிற்கும் மத்திய வங்கிக்கும் இடையிலான நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் பணவீக்கத்தினைப் பேணுவதனை இலக்காகக் கொண்டுள்ளது. 2023 ஒத்தோபரில் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தற்போதைய நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையானது காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கியினைத் தேவைப்படுத்துகின்றது.[2] இலக்கிலிருந்தான சாத்தியமான விலகல்களை அளவிடுதல் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற நோக்கங்களுக்காக நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் ±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட இடைவெளியொன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேலுள்ளவை தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளிற்கு மீறப்பட்டால் நிதியமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினை சமர்ப்பிக்க வேண்டுமென நாணயக் கொள்கைச் சபையினைத் தேவைப்படுத்துவதுடன், இது பொதுமக்களிற்குக் கிடைப்பனவாகவும் காணப்படல் வேண்டும்.

பணவீக்க இலக்கினை அடையும் பொருட்டு, குறுங்காலச் சந்தை வட்டி வீதங்களை விரும்பத்தக்க பாதையில் வழிநடத்துவதற்கு மத்திய வங்கி அதன் கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. 2024 நவெம்பரில் இரட்டைக் கொள்கை வீத முறைமையொன்றிலிருந்து ஒற்றைக் கொள்கை வீத முறைமையொன்றிற்கான ஊடுகடத்தலிலிருந்து ஓரிரவு கொள்கை வீதமானது மத்திய வங்கியின் முதன்மை நாணயக் கொள்கைக் கருவியாகத் தொழிற்பட்டுள்ளது. நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைச் சமிக்ஞைசெய்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இது பயன்படுத்தப்படுகின்றது. தற்போதைய கட்டமைப்பில், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது மத்திய வங்கியின் தொழிற்பாட்டு இலக்காகக் காணப்படுகின்றது. சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தினை அறிவிக்கப்பட்ட ஓரிரவு கொள்கை வீதத்தில் அல்லது அதற்கண்மையில் பேணுவதற்கான முயற்சிகள் நெறிப்படுத்தப்பட்டுள்ளன. தற்போதுள்ள நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில், ஓரிரவுச் சந்தை வட்டி வீதங்கள் நிதியியல் சந்தைகளினூடாக பரந்தளவிலான பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்பட்டு, இறுதியாக பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

---

[1] இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது ஆளுநர், ஆளும் சபை உறுப்பினர்கள், விலை உறுதிப்பாடு மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு என்பவற்றிற்குப் பொறுப்பான துணை ஆளுநர்கள் மற்றும் பொருளியல் அல்லது நிதியியலில் இரண்டு நிபுணர்கள் ஆகியோரைக் கொண்டுள்ளது.

[2] பணவீக்க இலக்கானது 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் மக்களிற்குத் தொடர்பூட்டப்பட்டது. காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாத காலப்பகுதியில் மாதாந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றங்களின் எளிய சராசரியினைக் குறிக்கின்றது.

நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் முன்னோக்கிய பார்வையிலமைந்தவையாகவும் தரவினால் உந்தப்பட்டவையாகவும் காணப்படுகின்றன. நாணயக் கொள்கை நடவடிக்கைகள் காலதாமதமொன்றுடன் பணவீக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றதென்பதனால் முன்னோக்கிய பார்வையிலமைந்ததோர் அணுகுமுறை இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. பொருத்தமான நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தீர்மானிப்பதற்கு ஆண்டொன்றிற்கு ஆறு தடவைகள் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை கூடுகின்றது. அதன் தீர்மானங்களை மேற்கொள்வதில், நாணயக் கொள்கைச் சபையானது தற்போதைய பணவீக்கம் மற்றும் அதன் தோற்றப்பாடு, பொருளாதாரத்தின் நிலை மற்றும் எதிர்கால வாய்ப்புக்கள் அத்தகைய எறிவுகளுடன் மற்றும் தொடர்புடைய இடர்நேர்வுகள் மற்றும் நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றை மதிப்பீடுசெய்கின்றது. இக்கூட்டங்களில் ஆராயப்பட்ட எறிவுகளானவை கிடைக்கப்பெற்ற தரவுகள், முக்கிய பேரண்டப் பொருளாதார மாறிகள் பற்றிய அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய குறிகாட்டிகளின் எறிவுகள் அதேபோன்று நிபுணத்துவ ஊழியர் தீர்மானங்களை அடிப்படையாகக்கொண்டுள்ளன. ஆளுநரின் தலைமையிலான உள்ளகக் குழுவொன்றாகக் காணப்படுகின்ற நாணயக் கொள்கைக் குழுவானது உன்னிப்பான பரிசீலனைகளுக்குப் பின்னர் நாணயக் கொள்கைச் சபையின் மீளாய்விற்கான கொள்கைப் பரிந்துரைகளை வழங்குகின்றது.

நாணயக் கொள்கை அறிக்கையானது மத்திய வங்கிச் சட்டத்தின் 27 மற்றும் 80ஆம் பிரிவுகளிற்கமைய தயாரிக்கப்படுகின்றது. இப்பிரிவுகள் பணவீக்கத்தின் அண்மைய போக்குகள், பணவீக்கத்தின் அடிப்படை மூலங்கள், நடுத்தரகால பணவீக்க எறிவுகள் மற்றும் அவ்வெறிவுகளிற்கான முக்கிய இடர்நேர்வுகள் மற்றும் அதன் நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் நோக்கங்களின் அடைவு என்பவற்றினைத் தெளிவுபடுத்துகின்ற அறிக்கையொன்றினை ஆண்டிற்கு இருமுறை வெளியிடுவதற்கு மத்திய வங்கிக்கு ஆணையளிக்கின்றன. அறிக்கையானது உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் என்பவற்றின் தற்போதைய அபிவிருத்திகள் தொடர்பில் பொதுமக்களுக்குத் தெரிவிக்கத் துணைபுரிகின்ற வேளையில், பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாட்டின் மதிப்பீடொன்றினையும் வழங்குகின்றது.

வரைபடம் 01: இலங்கையில் நாணயக் கொள்கைத் தீர்மானம் மேற்கொள்கின்ற செயன்முறை
(ஆண்டொன்றிற்கு ஆறு தடவைகள்)



சுருக்க அறிக்கை

பணவீக்கமானது 2024 செத்தெம்பரிலிருந்து எதிர்மறையான வீச்சில் தொடர்ந்து காணப்பட்டது. வலு மற்றும் போக்குவரத்துடன் தொடர்புடைய விலைகளின் வீழ்ச்சி மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் காணப்பட்ட உணவு விலைகளின் ஓரளவிலான விலைத் தளர்வு என்பன இப்பணச்சுருக்கத்திற்குப் பாரியளவில் காரணமாயமைகின்றன. இருப்பினும், முக்கியமாக உணவுப் பணவீக்கத் துரிதமடைதலின் காரணமாக பணச்சுருக்க நிலைமைகள் 2025 மாச்சிலிருந்து தளர்வடைந்துள்ளன. மேலும், ஆண்டு காலப்பகுதியில் வலு விலைகளில் மேல்நோக்கிய சீராக்கங்களும் இதற்குப் பங்களித்துள்ளன. தற்போதைய குறுகிய பணச்சுருக்க நிகழ்வானது உற்பத்தியாளர் நடத்தையில் மோசமாகத் தாக்கம் செலுத்தியிருக்காத அல்லது ஒட்டுமொத்த பொருளாதார நடவடிக்கைகளை இடையூறிற்குட்படுத்தியிருக்காத வேளையில், இது குடியிருப்புக்களின் வாழ்க்கைச் செலவுச் சுமையினை ஓரளவு தளர்த்துவதற்குப் பங்களித்துள்ளது.

பணச்சுருக்கமானது 2025இன் மூன்றாம் காலாண்டில் நிறைவடையுமென எதிர்பார்க்கப்படுவதுடன் அதன்பின்னர் பணவீக்கத்தின் படிப்படியானதொரு துரிதமடைதலுடன் 2026இன் நடுப்பகுதியில் 5 சதவீதத்தினை அடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில், பணவீக்கப் பாதையில் சாத்தியமான தற்காலிக உச்சநிலைகள் காணப்படுகின்ற போதிலும் பணவீக்கமானது 5 சதவீத இலக்கினை அண்மித்து உறுதிநிலைப்படுமென எறிவுசெய்யப்பட்டுள்ளது. தற்போது தாழ்ந்தளவிலான நேர்மறையான மட்டமொன்றில் தொடர்ந்து காணப்படுகின்ற மையப் பணவீக்கமும் நடுத்தர காலத்தில் உறுதிநிலைப்படுவதற்கு முன்னர் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பணவீக்க எறிவினை அடைவதில் மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. இருப்பினும், இடர்நேர்வு மதிப்பீடானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் பணவீக்க எறிவினை அடைந்துகொள்வதற்கான மிகவும் சமநிலைப்படுத்தப்பட்ட தோற்றப்பாடொன்றினை வெளிப்படுத்துகின்றது.

பொருளாதாரத்தில் பணவீக்க அழுத்தங்களினால் உந்தப்பட்ட மெதுவடைந்த கேள்விக்கு மத்தியில் தளர்வடைந்த நாணயக் கொள்கை நிலைப்பாடொன்றினை மத்திய வங்கி பேணியது. சந்தை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவு கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டுள்ளதுடன், இது சகல முக்கிய துறைகளிலும் தனியார் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல்களில் வலுவான வளர்ச்சியினை வசதிப்படுத்தியுள்ளது.

உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மைகளின் மீளெழுச்சிக்கு மத்தியில் வெளிநாட்டுத் துறைச் செயலாற்றமானது 2025இன் இதுவரையான காலப்பகுதியில் பாரியளவிலான தாக்குப்பிடிக்கக்கூடியதன்மையினைக் காட்டியது. விரிவடைகின்ற இறக்குமதிக் கேள்வியொன்று காணப்பட்ட போதிலும் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் என்பவற்றின் அடிப்படையில் மேம்பட்ட உட்பாய்ச்சல்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் கீழான ஐந்தாவது தொகுதியின் பெறுகை என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு இலங்கை ரூபாவானது ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக மிதமான பெறுமதித்தேய்வொன்றினைப் பதிவுசெய்தது. அதேவேளை, படுகடன் தீர்ப்பனவுத் தேவைப்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டுள்ள வேளையில், மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 6 பில்லியன் தொகைக்கு மேலாக பேணப்பட்டுள்ளன.

2025இன் இதுவரையான காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்து மற்றும் பொருளாதாரக் குறிகாட்டிகளில் பிரதிபலிக்கப்பட்டவாறு, முன்னோக்கிச் செல்கையில் அண்மைக் கால வளர்ச்சியானது பதிவுசெய்யப்பட்ட பாதையில் தொடர்ந்திருக்கக்கூடும். சாதகமான கொடுகடன் விரிவாக்கம், கூட்டுக் கேள்வியில் மீட்சி, வியாபார மனோபாவங்களை மேம்படுத்துகின்ற நிலையானதொரு கொள்கைச் சூழல் மற்றும் பொருளாதாரத்திலுள்ள கட்டமைப்புசார் பிரச்சனைகளை நிவர்த்திசெய்வதனை நோக்கிய தொடர்ச்சியான கொள்கை முயற்சிகள் என்பவற்றினால் இவ்வளர்ச்சி உத்வேகமானது ஆதரவளிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், துரிதமாக வளர்ச்சியடைந்து வருகின்ற உலகளாவிய வர்த்தகத் தோற்றப்பாடு, உலகளாவிய கொள்கை நிச்சயமற்றதன்மைகள் மற்றும் மீண்டெழுகின்ற புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பன பொருளாதாரத் தோற்றப்பாட்டின் மீது தாக்கமொன்றினைக் கொண்டிருக்கக்கூடும். வளர்ச்சி உத்வேகத்தினை நடுத்தர காலத்தில் நிலைபெறச்செய்தல் மற்றும் பொருளாதாரத்தின் சகல ஆர்வலர்களுக்கும் அதன் சமத்துவமிக்க நன்மைகளை நிச்சயப்படுத்துவதற்கும் அவசியமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்களினால் ஆதரவளிக்கப்பட்ட வளர்ச்சியினை மேம்படுத்துகின்ற நடைமுறைப்படுத்தத்தக்க கொள்கைகளைத் தேவைப்படுத்தும்.

1. நாணயக் கொள்கைச் சுருக்கம்

இலங்கை மத்திய வங்கி 2023 யூனில் தொடங்கிய நாணயக் கொள்கைத் தளர்த்தலை தொடர்ந்து அதன் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைப் பேணியது. ஒப்பீட்டளவில் மெதுவடைந்த கூட்டுக் கேள்வி நிலைமைகள் மற்றும் தாழ்ந்தளவிலானதொரு பணவீக்கச் சூழல் என்பவற்றிற்கு மத்தியில் இது இரண்டு ஆண்டுகளிற்கும் மேலான கொள்கைத் தளர்த்துகையினைக் குறித்துக்காட்டுகின்றது.

2024 நவெம்பரில் மேற்கொள்ளப்பட்ட கொள்கை வட்டி வீதக் குறைப்பிலிருந்து மத்திய வங்கி குறுகிய கொள்கை இடைநிறுத்தமொன்றினைத் தேர்ந்தெடுத்தமையானது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டுடன் இசைந்து செல்லும் விதத்தில் சந்தை வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடைவதற்கான இடைவெளியினை அனுமதித்தது. இதற்கமைய, 2025 சனவரி மற்றும் மாச்சு ஆகிய மாதங்களில், மத்திய வங்கி அதன் முக்கிய கொள்கை வட்டி வீதமான ஓரிரவு கொள்கை வீதத்தினை மாற்றமேதுமின்றி பேணியது. வலு விலைகளில் மீண்டும் மீண்டும் மேற்கோள்ளப்பட்ட குறைப்புக்களினால் உந்தப்பட்ட பணச்சுருக்க நிலைமையொன்று நிலவியபோதிலும், இலக்கினை நோக்கிய பணவீக்கத்தின் படிப்படியான ஒருங்கிணைவொன்றின் எறிவினை இது முக்கியமாகக் கருத்திற்கொண்டது. வெளிநாட்டுத் துறையின் தாக்குப்பிடிக்கக்கூடியதன்மைக்கு மத்தியிலான வலுவான கொடுகடன் வளர்ச்சி மற்றும் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளின் உறுதியான மீட்சி என்பவற்றுடன் இணைந்து சந்தை வட்டி வீதங்களின் படிப்படியான குறைப்பானது இந்நாணயக் கொள்கை மீளாய்வுகளின் போது மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதத்தினை மாற்றமின்றிப் பேணுவதற்கான தீர்மானத்திற்கு ஆதரவளித்தது.

மின்சாரக் கட்டணச் சீராக்கத்தில் ஏற்பட்ட தாமதம் மற்றும் அதிகரித்துச் செல்லக்கூடிய உலகளாவிய நிச்சயமற்றதன்மைகளிலிருந்து உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது ஏற்படக்கூடிய தாக்கம் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, பணவீக்கமானது முன்னர் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க வேகமாக இயல்புநிலையினை அடையுமென எதிர்பார்க்கப்பட்டமையினால் 2025 மேயில், ஓரிரவு கொள்கை வீதத்தினை 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைவடையச் செய்ததன் மூலம் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கை நிலைப்பாட்டினை மேலும் தளர்த்தியது. இக்காலப்பகுதியில் அநேகமான சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களில் ஏற்பட்ட மிதமான வேகத்திலான குறைப்பினைக் கருத்திற்கொண்டு சந்தை வட்டி வீதங்களில் மேலும் கீழ்நோக்கிய சீராக்கலொன்றிற்கு வழிகாட்டும் விதத்திலும் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை, பணவீக்கம் இலக்கினை நோக்கிய வலுவான ஒருங்கிணைவொன்றுடன் 2025இன் மூன்றாம் காலாண்டில் நேர்க்கணியமாகத் திரும்பலடைவதற்கான பாதையில் காணப்பட்டமையினால் 2025 யூலையில் மேற்கொள்ளப்பட்ட அண்மைய நாணயக் கொள்கை மீளாய்வுச் சுற்றில் ஓரிரவு கொள்கை வீதமானது மாற்றமின்றிப் பேணப்பட்டது. பொருளாதாரத்தில் கேள்வி நிலைமைகளின் மீட்சியுடன் மையப் பணவீக்கமும் படிப்படியான அதிகரிப்பொன்றினைக் குறித்துக்காட்டியது. உறுதியான வளர்ச்சி உத்வேகம் மற்றும் வலுவான கொடுகடன் வளர்ச்சி என்பவற்றினால் கொள்கை வட்டி வீதத்தினைப் பேணுவதற்கான தீர்மானமானது மேலும் ஆதரவளிக்கப்பட்ட அதேவேளையில், புதுப்பிக்கப்பட்ட உலகளாவிய கொள்கை நிச்சயமற்றதன்மையும் முன்மதிமிக்க மற்றும் எச்சரிக்கைமிக்க அணுகுமுறையொன்றினைத் தேவைப்படுத்தியது.

இதற்கமைய, மத்திய வங்கி அதன் கொள்கை வட்டி வீதத்தினை 2023 யூன் தொடக்கம் 2025 யூலை வரையான காலப்பகுதியில் மொத்தமாக 800 அடிப்படைப் புள்ளிகளினால் (8.0 சதவீதப் புள்ளிகள்) குறைத்துள்ளது.

இவ்வாண்டின் ஐந்தாவது நாணயக் கொள்கை மீளாய்விற்காக நாணயக் கொள்கைச் சபை 2025 செத்தெம்பரில் கூடும்.

கடந்த நாணயக் கொள்கை அறிக்கையிலிருந்தான நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் (2025 பெப்புருவரி– 2025 யூலை):

2025 மாச்சு	2025 மே	2025 யூலை
ஓரிரவு கொள்கை வீதமானது 8.00 சதவீதமாகப் பேணப்பட்டது	ஓரிரவு கொள்கை வீதமானது 7.75 சதவீதத்திற்கு 25 அடிப்படைப் புள்ளிகளினால் குறைக்கப்பட்டது	ஓரிரவு கொள்கை வீதமானது 7.75 சதவீதமாகப் பேணப்பட்டது

நாணயக் கொள்கை மீளாய்வு தொடர்பான ஊடக அறிக்கைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கீயூஆர் (QR) குறியீட்டை ஸ்கேன்/கிளிக் செய்யவும்

2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு

பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் எறிவுகளை மையமாகக் கொண்டு, 2025 யூலை மாத நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில், மத்திய வங்கியின் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் இப்பகுதியில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.[3] இவ்வெறிவுகள் 2025 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த தரவுகள், முக்கிய மாறிகளின் அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய பேரண்டப்பொருளாதார எறிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றைப் பிரதிபலிக்கின்றன. இவ்வெறிவுகள் இவ்வறிக்கையில் *அடிப்படை எதிர்வுகூறலாகக்* கருத்திற்கொள்ளப்படுகின்றன.

2.1. அடிப்படை எதிர்வுகூறல்

சமீபத்திய அண்மைக் கால எறிவுகளின் பிரகாரம், வலுவுடன் தொடர்புடைய பணச்சுருக்கத்தின் தளர்வடைதலினை முதன்மையாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில், தற்போது நிலவுகின்ற பணச்சுருக்க நிலைமைகள் தளர்வடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. பணவீக்கமானது 2025இன் மூன்றாம் காலாண்டில் நேர்க்கணியமாக வீச்சொன்றிற்கு திரும்புமென எதிர்பார்க்கப்படுகிறது. கேள்வி நிலைமைகள் உறுதியடைவதனால் ஆதரவளிக்கப்பட்டு, முதன்மைப் பணவீக்கமானது தொடர்ச்சியாக உயர்வடைந்து 2026இன் நடுப்பகுதியில் 5 சதவீத இலக்கினை அடையுமென நடுத்தர கால எறிவுகள் குறிப்பிடுகின்றன. அதன்பின்னர், சாத்தியமான ஒரு அதிகரிப்பை தொடர்ந்து பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் நடைமுறைப்படுத்தலினால் பணவீக்கமானது இலக்கில் நிலைபெறுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. 2025இன் இரண்டாம் காலாண்டிற்கான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது வலுவாகக் காணப்பட்டு, 2024இல் மற்றும் 2025இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட நேர்க்கணிய உத்வேகத்தினைத் தொடருமென அண்மைய சமகால எதிர்வுகூறல்கள் எதிர்பார்க்கின்றன. முன்னோக்கிப் பார்க்கையில், தற்போது கிடைப்பனவாகவுள்ள தகவல்களுக்கு அமைய 2025இற்கான பொருளாதார வளர்ச்சியானது ஏறத்தாழ 4.5 சதவீதத்தில் காணப்படுமென எறிவு செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், வெளிநாட்டுக் கேள்வி நிலைமைகள் மற்றும் மாற்றமடைந்து வருகின்ற உலகளாவிய புவிசார் பொருளாதாரத் தோற்றப்பாடு என்பன அண்மைய காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான வளர்ச்சி வாய்ப்புக்கள் மீதான நிச்சயமற்ற தன்மை மட்டங்களை அதிகரிக்கிறது.

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள்[4]

2025இன் முதலாம் காலாண்டில் அதன் உச்சளவிலான மட்டத்தினைப் பதிவுசெய்ததிலிருந்து, பணச்சுருக்க நிலைமைகள் முன்னர் கணிக்கப்பட்டவாறு தளர்வடையத் தொடங்கியுள்ளன. அதிகரித்தளவிலான உணவு விலைகள் 2025இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் இப்போக்கினை

[3] உலகளாவிய பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணவீக்கத் தரவுகளின் மாதாந்த வெளியீடுகள் மற்றும் மொ.உ.உற்பத்தித் தரவுகளின் காலாண்டு வெளியீடுகள் என்பன உள்ளடங்கலாக, ஆயினும் இவை மாத்திரமன்றி, அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் குறித்த தரவுகள் என்பவற்றினைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் இற்றைப்படுத்தப்படுகின்ற நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளை அடையும் பொருட்டு பகுதியளவிலான கட்டமைப்புசார் பேரண்டப்பொருளாதார மாதிரியொன்றான காலாண்டு எறிவு மாதிரியினை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது.

[4] முதன்மைப் பணவீக்கமானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (கொ.நு.வி.சு., 2021=100) அடிப்படையாகக் கொண்டு அளவிடப்படுகிறது.

வலுப்படுத்தியது. அதேவேளை, 2025 யூனில் மின்சாரத் தீர்வைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் பணச்சுருக்க மட்டங்களைத் தளர்வடையச் செய்வதற்குப் பங்களித்ததுடன் அதன் தாக்கமானது 2025இன் மூன்றாம் காலாண்டிலும் தொடர்ந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், புள்ளிவிபரத்தளத் தாக்கத்தின் விளைவும் 2025இன் மூன்றாம் காலாண்டுப் பகுதியில் பணவீக்கத்தின் மேல்நோக்கிய போக்கிற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்ந்து மூன்று காலாண்டு பணச்சுருக்கத்தினை தொடர்ந்து 2025இன் மூன்றாம் காலாண்டில் பணவீக்க நிலைமைகளுக்கு திரும்புவதுடன் 2025இன் நான்காம் காலாண்டிலும் பணவீக்கத்தில் மேலதிக அதிகரிப்பொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர கால எறிவுகளின் பிரகாரம், 2026இன் நடுப்பகுதியில் முதன்மை பணவீக்கம் 5 சதவீத இலக்கினை அடையுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. 2026இன் இரண்டாம் அரையாண்டு வரை பணவீக்கத்தின் இவ்வதிகரித்துச் செல்கின்ற போக்கானது தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், அதன்பின்னர் பொருத்தமான கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன் பணவீக்கம் 5 சதவீத இலக்கினை நோக்கி உறுதிநிலைப்படுத்தப்படத் தொடங்கும். பணவீக்கத்தின் இவ்வொட்டுமொத்த அதிகரித்துச் செல்கின்ற பாதையானது கேள்வி அழுத்தங்களின் படிப்படியான முன்னேற்றம் மற்றும் பணச்சுருக்கத்தின் விரிவாக்கப்பட்ட காலப்பகுதியொன்றின் பின்னர் அதன் வழமையான வேகத்திற்கான வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட படிப்படியானதொரு மாறுதல் என்பவற்றிற்குக் காரணமாயமைந்திருக்கக்கூடும். இருப்பினும், மாற்றமடைந்து வருகின்ற உலகளாவிய பேரண்டப்பொருளாதார நிலைமைகள் தொடர்பில் நிலவுகின்ற நிச்சயமற்றதன்மையானது நடுத்தர கால எறிவுகளுடன் இணைந்த நிச்சயமற்றதன்மையில் ஏற்பட்ட கணிசமானளவிலான அதிகரிப்பொன்றிற்கு வழிவகுக்கின்றது.

வரைபடம் 02: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம் (காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)
2025 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்



*** மத்திய வங்கி மற்றும் நிதியமைச்சிற்கிடையில் 2023 ஒத்தோபர் அன்று கைச்சாத்திடப்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையின் கீழ் பணவீக்க எல்லையானது (5 சதவீதம்) இற்கு உடன்படப்பட்டது.*

குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

குறிப்பு: எதிர்வுகூறலொன்று என்பது வாக்குறுதியொன்றோ அன்றில் கடப்பாடொன்றோ அல்ல

2025 யூலையில் நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. அவை உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளின் எதிர்வுகூறல்கள், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, அரசாங்கத்தின் எதிர்பார்க்கப்படும் உள்நாட்டு இறைப் பாதை மற்றும் பெடரல் நிதியங்கள் வீதத்தினால் குறித்துரைக்கப்பட்ட உலகளாவிய நிதியியல் நிலைமைகள் ஆகிய நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணப்படுகின்றன. மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதம் மற்றும் தோற்றம்பெறுகின்ற பேரண்டப்பொருளாதார பதிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகக் காணப்படுகின்றன. மேலும், அடிப்படை எறிவுகளில் முக்கிய பேரண்டப்பொருளாதாரக் கொள்கை நகர்வுகளெதுவும் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆதலால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் தொடர்ச்சி மற்றும் இறைத் திரட்சி மீதான முயற்சிகள் என்பன உள்ளார்ந்தமாகக் குறித்துக்காட்டப்படுகின்றன. அடிப்படை ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றில் ஏற்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். வீச்சு வரைபடங்களுடன் இணைந்து, நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். தளம்பலான உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்திலுள்ள நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளிற்கு உள்ளாகின்றன. அடிப்படை எதிர்வுகூறலிற்கான இடர்நேர்வுகள் குறித்த விவரங்கள் “எறிவுகளிற்கான இடர்நேர்வுகள்” பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மையப் பணவீக்கமும் அண்மைக் காலத்தில் படிப்படியான அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலத்தில், மையப் பணவீக்கமானது முதன்மைப் பணவீக்கத்திலும் பார்க்க தாழ்ந்தளவிலான தளம்பலொன்றுடன் 5 சதவீதம் கொண்ட முதன்மைப் பணவீக்க இலக்குடன் இசைந்து செல்கின்ற மட்டமொன்றில் உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்வருகின்ற காலப்பகுதியில் முதன்மைப் பணவீக்க இலக்கினை நோக்கிய மையப் பணவீக்கத்தின் படிப்படியான இயல்புநிலைக்குத்திரும்பலானது கேள்வி நிலைமைகளில் எதிர்பார்க்கப்படும் மீட்சி மற்றும் உலகளாவிய உணவு விலைகள் மற்றும் உலகளாவிய பணவீக்கப் போக்குகளினால் பகுதியளவில் உந்தப்படுகின்ற இறக்குமதியினாலான பணவீக்கம் என்பவற்றினால் உந்தப்படுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது. இதற்கமைய, அத்தகைய உலக பணவீக்க அபிவிருத்திகளின் எறிவுகள் குறித்து நிலவுகின்ற நிச்சயமற்றதன்மையும் மையப் பணவீக்க எறிவுகளை ஓரளவிற்குப் பாதிக்கும்.

வரைபடம் 03: எறிவுசெய்யப்பட்ட மையப் பணவீக்கம் (காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)

2025 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்



குறிப்பு: வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.

மேலேயுள்ள வரைபடம் 02இலுள்ள விளக்கக்குறிப்பைப் பார்க்கவும்.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

வலு மற்றும் போக்குவரத்துப் பணச்சுருக்கமானது மேலும் தளர்வடைந்து, நடுத்தர காலத்திலான இலக்கினை நோக்கிய முதன்மைப் பணவீக்கத்தில் அதிகரிப்பொன்றிற்குப் பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், அண்மைக் காலத்தில் எதிர்பார்க்கப்படும் தற்காலிகமாக உயர்வடைந்த உலகளாவிய எண்ணெய் விலைகளும் வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்க பாதையினை அதிகரிப்பதற்குப் பங்களிக்கக்கூடும். இருப்பினும், மாற்றமடைந்து வருகின்ற உலகளாவிய பேரண்டப்பொருளாதார நிலைமைகள் உலகளாவிய எண்ணெய் விலைகள் தொடர்பான எதிர்பார்க்கைகள் குறித்த நிச்சயமற்றதன்மையினை அதிகரிக்கின்றது. நிரம்பல் காரணிகளினால் பாரியளவில் பங்களிக்கப்பட்ட தளம்பலான உணவுப் பணவீக்கத்தின் அண்மைய அதிகரிப்பானது ஆரோக்கியமான அறுவடை காரணமாக அண்மைய காலத்தில் மிதமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், வானிலைப் போக்குகளின் திடீர் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் தாக்கம் போன்ற இடைக்கிடையான நிரம்பல் காரணிகள் தளம்பலான உணவுப் பணவீக்கத்தினைத் தொடர்ந்து பாதிக்கும். இருப்பினும், இத்தகைய காரணிகள் அவற்றின் சீரற்ற தன்மை காரணமாக எறிவுகளின் பகுதியாக அமைவதில்லை. ஆதலால், இவை எறிவுகளை அடைதலுடன் இணைந்த இடர்நேர்வுகளின் பகுதியாகக் கருதப்படுகின்றன.

வரைபடம் 04: முதன்மைப் பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத் தாக்கம் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)



குறிப்பு: உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் பற்றிய விளக்கத்திற்கு சிறப்பு குறிப்பு அ ஐப் பார்க்கவும்

மூலம்: மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

சிறப்புக்குறிப்பு அ: உத்வேகம் மற்றும் தளத் தாக்கத்தினை விளங்கிக்கொள்ளல்[1]

பணவீக்கமானது முன்னைய ஆண்டின் (ஆண்டிற்காண்டு) அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் பொது விலை மட்டத்தில் சதவீத மாற்றமொன்றாக பொதுவாக அளவிடப்படுகிறது. பொது விலை மட்டமானது நுகர்வோர் விலைச் சுட்டெண்ணொன்றினால் அளவிடப்படுகின்றது (இலங்கையைப் பொறுத்தவரையில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது இலங்கையில் பணவீக்கத்தினை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (கொ.நு.வி.சு.) மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (தே.நு.வி.சு.) ஆகிய இரு முக்கிய விலைச் சுட்டெண்களைத் தொகுத்து வெளியிடுகின்றது. இருப்பினும், விலைத் தகவல்கள் வழமையாக மாதாந்த இடைவெளியொன்றில் கிடைப்பனவாகக் காணப்படுவதனால், விலைகளில் ஏற்படும் மாற்றங்களும் மாதாந்த அடிப்படையொன்றில் கணிக்கப்படலாம்.

நடப்பு மாதத்தின் மாதாந்தப் பணவீக்கமானது உத்வேகமெனப் பொதுவாக அழைக்கப்படுகின்ற வேளையில், முன்னைய ஆண்டின் அதே மாதத்தில் மாதாந்தப் பணவீக்கத்தின் எதிர்மறைப் பெறுமதி தளத் தாக்கமென அழைக்கப்படுகின்றது. அண்மைய மாதத்தில் விலை அபிவிருத்திகள் காரணமாக ஆண்டிற்காண்டு பணவீக்கம் எவ்வாறு மாறுகின்றதென்பதை இவ்வுத்வேகம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற வேளையில், தளத் தாக்கமானது ஒரு மாதத்திலிருந்து அடுத்த மாதத்திற்கான ஆண்டிற்காண்டு பணவீக்கம் எவ்வாறு மாறுகின்றதென்பதைப் பாதிக்கின்ற புள்ளிவிவர தாக்கத்தினை எடுத்துக்காட்டுகின்றது. ஒரு மாதத்திலிருந்து அடுத்த மாதத்திற்கான ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் மாற்றமானது உத்வேகம் மற்றும் தளத் தாக்கம் என்பவற்றினைச் சேர்ப்பதன் மூலம் அண்ணளவாக மதிப்பிடப்படலாம்.[2] வேறு வார்த்தைகளில் கூறுவதானால், நடப்பு மாதத்தின் ஆண்டிற்காண்டு பணவீக்கமானது முன்னைய மாதத்தின் ஆண்டிற்காண்டு பணவீக்கத்திற்கு உத்வேகத்தையும் தளத் தாக்கத்தினையும் சேர்ப்பதன் மூலம் பெற்றுக்கொள்ளப்படலாம் (எடுத்துக்காட்டு, $\pi_t^{YoY} \approx \pi_{t-1}^{YoY} + \text{உத்வேகம்} + \text{தளத் தாக்கம்}$, இங்கு π பணவீக்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது). இப்பிரிவானது ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் இயக்கவாற்றல்களிற்கான முக்கிய பங்களிப்புக் காரணிகளை ஆய்வாளர்கள் மதிப்பீடு செய்வதனை அனுமதிக்கின்றது.

பணவீக்கத்தின் மீதான உத்வேகம் மற்றும் தளத் தாக்கம் என்பவற்றிற்கிடையிலான இணைப்பானது வரைபடம் அ.1 இனைப் பயன்படுத்தி மேலும் விளக்கலாம். இக்கருதுகோள் அடிப்படையிலான உதாரணத்தில், விலை மட்டமானது ஒவ்வொரு மாதத்திலும் 0.5 சதவீத வீதமொன்றில் தொடர்ச்சியாக அதிகரிக்கின்றது. அதாவது மாதாந்த பணவீக்கமானது 0.5 சதவீதத்தில் தொடர்ந்து நிலையாகக் காணப்படுகின்றது. அதன்மூலம், ஒவ்வொரு மாதத்திலும் 6 சதவீதம் கொண்ட நிலையான ஆண்டிற்காண்டு பணவீக்கமொன்றிற்கு இது வழிவகுக்கின்றது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், விலை அதிகரிப்பின் நிலையான வீதமானது சம அளவிலான உத்வேகம் மற்றும் தளத் தாக்கத்திற்கு அதிகரிப்பொன்றினை வழங்கி, ஒன்று மற்றையதை இரத்துசெய்து, ஆண்டிற்காண்டு பணவீக்கத்தினை மாற்றமின்றிப் பேணுகின்றது. 3.5 சதவீத மாதாந்த அதிகரிப்பொன்று 02ஆம் ஆண்டின் 05ஆம் மாதத்தில் சடுதியாக நிகழ்கின்றதெனவும், அதன்பின்னர் அது திரும்பலடைந்து 0.5 சதவீத மாதாந்த பணவீக்கமொன்றினைத் தொடர்ந்து பதிவுசெய்கின்றதெனவும் கருதுவோம். புதிய உத்வேகமானது 3.5 சதவீதமாகவும் தளத் தாக்கம் 0.5 சதவீதமாகவும் தொடர்ந்து காணப்படுவதனால் ஆண்டிற்காண்டு பணவீக்கமானது 02ஆம் ஆண்டின் 05ஆம் மாதத்தில் அண்ணளவாக 3.0 சதவீதத்தினால் அதிகரிப்பதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. உத்வேகம் மற்றும் தளத் தாக்கம் என்பன மீண்டும் சமமாக இருப்பதனால் அதன்பின்னர் இவ்வுயர்ந்த மட்டத்தில் ஆண்டிற்காண்டு பணவீக்கமானது மாற்றமின்றித் தொடர்ந்தும் காணப்படுகின்றதென்பது மேலும் தெளிவாகின்றது. இருப்பினும், ஆண்டின் இறுதியளவில் (அதாவது, 03ஆம் ஆண்டின் 05ஆம் மாதம்), ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் உயர்வடைதலொன்றிற்குப் பங்களித்த உத்வேகமானது தளத் தாக்கமொன்றிற்கு மாறுதலடைந்து, ஆண்டிற்கு பணவீக்கத்தில் 3.0 சதவீதமளவில் வீழ்ச்சியொன்றேற்படுவதற்கு வழிவகுக்கின்றது. தளத் தாக்கமானது 12 மாத கால பின்னடைவொன்றுடன் எதிரீட்டு விளைவொன்றினைக் கொண்டிருந்து, ஆண்டிற்காண்டு பணவீக்கத்தில் நிகழ்ந்த முதலாவது மாற்றத்தினை சீராக்குமென இது குறித்துக்காட்டுகின்றது.

இக்கருதுகோளின் அடிப்படையிலான உதாரணமானது நிலையான மாதாந்த விலை அதிகரிப்புக்களை ஊகிப்பதன் மூலம் எளிமைப்படுத்தப்பட்ட அமைப்பொன்றில் உத்வேகம் மற்றும் தளத் தாக்கத்தின் இயக்கவாற்றல்களினை விளக்குவதற்கு முயற்சிக்கின்ற வேளையில், தற்போதைய நாணயக் கொள்கை அறிக்கையின் வரைபடம் 04இல்

காட்டப்பட்டுள்ளவாறு, யதார்த்தமான வாழ்க்கையில் மாதாந்த விலை மாற்றங்கள் அடிக்கடி தளம்பலடைந்து, உத்வேகம் மற்றும் தளத் தாக்கங்களின் மாறுபடுகின்ற மட்டங்களிற்கு அதிகரிப்பினை வழங்குகின்றன.

வரைபடம் அ.1: கருதுகோள் அடிப்படையிலான உதாரணம்: உத்வேகம் மற்றும் தளத்தாக்க விளைவின் இயக்கவாற்றல்கள்



குறிப்பு: சதவீத மாற்றங்கள் மடக்கை வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டவை.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

[1] மிகவும் விரிவான கலந்துரையாடலொன்றிற்கு, மத்திய வங்கியின் இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய "இலங்கையின் பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறை" குறித்த சிறப்புக்குறிப்பினைப் பார்க்கவும்.

[2] இவ்வண்ணளவாக்கமானது சதவீத மாற்றங்கள் மடக்கை வேறுபாடுகளினால் அண்ணளவாக்கப்பட முடியுமென்பதன் மூலம் தூண்டப்படுகின்றது.

பணவீக்க எதிர்பார்க்கைகள்

மத்திய வங்கி மூலம் மேற்கொள்ளப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்பிலான அளவீட்டின் பிரகாரம், கம்பனித் துறையின் குறுங்கால பணவீக்க எதிர்பார்க்கைகள் உண்மைப் பணவீக்கத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் பரந்தளவில் நகர்ந்தன. இதற்கமைய, 3 மாத மற்றும் 6 மாத காலங்களுக்கு அப்பாலான பணவீக்க எதிர்பார்க்கைகள் 2025 சனவரி தொடக்கம் 2025 மாச்சு வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த வீழ்ச்சியடைந்து செல்கின்ற போக்கொன்றினைப் பின்தொடர்ந்து, அதன் பின்னர் உயர்வடைந்தன. 2025 யூலை மாத அளவீட்டுச் சுற்றின் பிரகாரம், தளர்வடைகின்ற பணச்சுருக்க அழுத்தங்களுடன் இணைந்து, எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தின் படிப்படியானதோர் அதிகரிப்பானது 3 மாதங்களிலிருந்து நீண்ட காலங்களுக்கு அப்பாலான தவணைகளில் அவதானிக்கப் பட்டது. மேலும், கம்பனித் துறையின் நடுத்தர கால பணவீக்க எதிர்பார்க்கைகள் மத்திய வங்கியின் பணவீக்க எறிவுகள் மற்றும் 5 சதவீத பணவீக்க இலக்கு என்பவற்றுடன் தொடர்ந்தும் பரந்தளவில் ஒத்திசைந்து காணப்பட்டன.

உண்மை பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்

முன்கூட்டிய பொருளாதாரக் குறிகாட்டிகள், அளவீட்டுக் கண்டறிகைகள் மற்றும் அலுவலர் மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையிலமைந்த பொருளாதார வளர்ச்சி மீதான சமகால எறிவுகளும் அண்மைக்கால எதிர்வு கூறல்களும் 2025இன் இரண்டாம் காலாண்டிலும் உண்மை மொத்த

உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது வலுவாகக் காணப்பட்டு, 2024இல் மற்றும் 2025இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட நேர்க்கணிய உத்வேகத்தினைத் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வளர்ச்சியானது முக்கியமாக கைத்தொழில் மற்றும் வேளாண்மை ஆகிய துறைகளில் வலுவான நடவடிக்கையினால் ஆதரவளிக்கப்படுகின்றது. மேலும், சகல மூன்று துறைகளிலும் எதிர்பார்க்கப்படுகின்ற நேர்மறையான ஆண்டிற்காண்டு வளர்ச்சி வீதங்களுடன் 2025இன் மூன்றாம் காலாண்டிற்கான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சியானது வலுவாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், மேல்நோக்கிய வளர்ச்சி உத்வேகமானது தற்போதைய உலகளாவிய வர்த்தக நிச்சயமற்றதன்மைகள் மற்றும் எளிதில் மோசமடையக்கூடிய புவிசார் அரசியல் நிலைமைகள் என்பவற்றினால் பாதிக்கப்படையக்கூடும்.[5]

நடுத்தர காலத்தில், பொருளாதாரம் மிதமான வளர்ச்சிப் பாதையொன்றில் பயணிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஒப்பீட்டளவில் தளர்வடைந்த நாணய நிலைமைகள் இந்த மிதமான வளர்ச்சிப் பாதைக்கு பங்களிக்கின்றன. நடுத்தர காலத்தில் குறைந்தளவிலான நேர்க்கணிய மட்டங்களிற்கான வெளியீட்டு இடைவெளியின் படிப்படியானதொரு மாறுதலொன்று எதிர்பார்க்கப்படுவதானது கூட்டுக் கேள்வியின் மீட்சியினைக் குறித்துக்காட்டுகின்றது. இருப்பினும், திரட்சி முயற்சிகளுடனான இறைக் கொள்கையானது நடுத்தர காலத்தில் சுருக்கமடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதானது கூட்டுக் கேள்வியினை உறுதிநிலைப்படுத்தத் துணைபுரிகின்றது. அதேவேளை, நேர்மறையான வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது சுருக்கமடையுமெனவும் எதிர்மறையாகத் திரும்பலடையுமெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வெதிர்மறை இடைவெளியானது நடுத்தர காலத்தில் தொடர்ந்தும் எதிர்மறையாகக் காணப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளமையானது ஐக்கிய அமெரிக்க வர்த்தகம் தொடர்பான கொள்கைகளினால் முக்கியமாக உந்தப்பட்ட மெதுவடைந்த வெளிநாட்டுக் கேள்வியினை எடுத்துக்காட்டுகின்றது.

நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சிப் பாதையானது கணிசமானளவு நிச்சயமற்றதன்மைக்கு உட்பட்டுக் காணப்படுகின்றதென்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். குறிப்பிடத்தக்க பொருளாதார மீட்சி உத்வேகத்தின் தொடர்ச்சியானது இலக்கிடப்பட்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சி உபாயங்கள் என்பவற்றின் விரைவான மற்றும் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தல் குறித்த நிபந்தனைக்குட்பட்டதாகக் காணப்படுகின்றது. முதலீட்டாளர் நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் தனியார் துறையின் முன்னோடியிலான நீண்டகால, நீடித்துநிலைத்திருக்கின்ற பொருளாதார அபிவிருத்திக்கு உகந்த சூழலொன்றினை உருவாக்குவதற்கும் ஊழல் பாதிப்படையக்கூடியதன்மைகளின் தொடர்ச்சியான நிவர்த்திசெய்தலானது இன்றியமையாததாயமையும். இது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆகிய இரு சேமிப்புக்களினாலும் ஆதரவளிக்கப்படும் முதலீட்டில் வலுவான வளர்ச்சியொன்றினை உருவாக்கத் துணைபுரியுமென்பதுடன், இது வளர்ச்சி உத்வேகத்தைத் நிலைநிறுத்துவதில் தீர்க்கமானதாயமையும்.

[5] சமீபத்திய தகவலின்படி,இலங்கை ஏற்றுமதிகளுக்கு 20 சதவீத தீர்வையை ஐக்கிய அமெரிக்கா விதித்துள்ளது.

வரைபடம் 05: எறிவுசெய்யப்பட்ட காலாண்டு ரீதியான உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி, (%, ஆண்டிற்காண்டு)
2025 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்



மேலேயுள்ள வரைபடம் 02இலுள்ள விளக்கக்குறிப்பைப் பார்க்கவும்.

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்

2025 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் நடுத்தர கால எதிர்வுகூறல்களை அடைவதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் சுருக்கமொன்று இப்பகுதியில் தரப்பட்டுள்ளது.

உலகளாவிய சூழல்

ஐக்கிய அமெரிக்க பரஸ்பர தீர்வை தொடர்பிலான அறிவிப்புகளினால் உலகளாவிய சந்தைகள் குழப்பமடைந்தமையானது உலகளாவிய பொருளாதாரத்தின் நிச்சயமற்றதன்மைக்கு வழிவகுத்தது. அதிகரித்த நிச்சயமற்றதன்மை மற்றும் தற்போதுள்ள புவிசார் அரசியல் பதற்றங்கள் என்பவற்றினால் உந்தப்பட்டு உலகளாவிய பொருளாதார வளர்ச்சியானது மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரித்தளவிலான உலகளாவிய நிரம்பல் சங்கிலி மற்றும் வர்த்தகத் திரிபுபடுத்தல்கள் மற்றும் புவிசார் அரசியல் பதற்றங்களுடன் இணைந்த பண்ட விலைத் தளம்பல்கள் ஆகியவற்றினால் தற்போதைய பணவீக்க வீழ்ச்சிச் செயன்முறை மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுவதானது மத்திய வங்கிகளின் வட்டி வீதக் குறைப்புக்களின் வேகத்தின் மீள்மதிப்பீடொன்றினைத் தேவைப்படுத்துகின்றது. உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பிற்கமைய,[6] ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது[7] ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய வலயத்தில் எதிர்பார்க்கப்பட்ட மெதுவடைதலின் காரணமாக சடுதியாக வீழ்ச்சியடைந்து, அண்மைக் காலத்தில் எதிர்மறையாகத்

[6] மத்திய வங்கியானது நடுத்தரகால எறிவுகளிற்கான உள்ளீடுகளாக உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய பேரண்டப்பொருளாதார குறிகாட்டிகளின் எறிவுகளைப் பயன்படுத்தப்படுகின்றது. 2025 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட எறிவுகள் 2025 யூன் 25 அன்று கிடைக்கப்பெற்ற உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பு எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

[7] இலங்கையின் ஆறு முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடன் தொடர்புடைய ஏற்றுமதிகளின் இயல்பு நிலைப்படுத்தப்பட்ட பங்குகளைப் பயன்படுத்தி உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பின் எறிவுகளில் தரப்பட்டுள்ள வர்த்தகப் பங்காளர்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வெளியீட்டு இடைவெளியொன்றாக ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளியானது கணிக்கப்பட்டுள்ளது.

திரும்பலடையுமெனவும் நடுத்தர காலத்தில் தொடர்ந்தும் மெதுவடையுமெனவும் எறிவுசெய்யப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்க நுகர்வோர் விலைச் சுட்டெண் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2025இன் முதலரைப் பகுதியில் ஏறத்தாழ 2.6 சதவீதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. இருப்பினும், தீர்வைத் தாக்கங்களுடன் இணைந்து எதிர்பார்க்கப்படும் பொருட்கள் பணவீக்கத்தின் அதிகரிப்புக்கள் மற்றும் உயர்ந்தளவிலான வலு விலைகள் என்பவற்றுடன் ஐக்கிய அமெரிக்க பணவீக்கமானது எதிர்வருகின்ற மாதங்களில் இலக்கிலும் பார்க்க சிறிதளவு மேலாகத் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க பெடரல் நிதிய வீதத்தில் படிப்படியான தளர்வொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. இஸ்ரேல் - ஈரான் - ஐக்கிய அமெரிக்க முரண்பாட்டால் ஏற்பட்ட புவிசார் அரசியல் பதற்றங்கள் காரணமாக பிறன்ட் மசகெண்ணெய் விலைகள் ஆரம்பத்தில் உயர்வடைந்த போதிலும், தீவிரத்தன்மையின் சடுதியான குறைப்பைத் தொடர்ந்து விரைவாகத் தளர்வடைந்தன. உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பிற்கமைய, சராசரி பிறன்ட் எண்ணெய் விலையானது பெற்றோலிய ஏற்றுமதி நாடுகளின் அமைப்பு பிளஸ் (OPEC+) உற்பத்தியில் தொடர்ச்சியான அதிகரிப்புக்கள் மற்றும் உலகளாவிய கேள்வியின் மெதுவடைதல் ஆகியவற்றினால் உந்தப்பட்டு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025இல் குறைவாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. உலகளாவிய உணவுப் பணவீக்கத் தோற்றப்பாடானது எதிர்வருகின்ற ஆண்டுகளில் தொடர்ந்தும் பரந்தளவில் நிலையானதாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இறைப் பாதை

தற்போதைய எறிவுகளில் இணைக்கப்பட்ட இறைப் பாதையுடன் தொடர்புடைய எதிர்வுகூறல்கள் யூனில் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதி செயல் நுணுக்குக் கூற்று 2026இற்கமைய இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு

ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான பாரியளவிலான மிகையினால் முக்கியமாக உந்தப்பட்டு 2025இற்கான நடைமுறைக் கணக்கு மிகையொன்று எறிவுசெய்யப்பட்டுள்ளது.

2.3. அடிப்படை எதிர்வுகூறல்களின் அடைவிற்கான இடர்நேர்வுகள்

பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி என்பவற்றின் அடிப்படை எறிவுகளின் அடைவிற்கு மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இரண்டிலுமான இடர்நேர்வுகள் காணப்படுகின்றன. 2025 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றிற்கமைவாக அத்தகைய இடர்நேர்வுகளின் வெளிப்படுத்துகையொன்று இப்பிரிவில் வழங்கப்படுகின்றது.

பணவீக்க எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்

பல மேல்நோக்கிய இடர்நேர்வுகள் பணவீக்கத்தினை எறிவுசெய்யப்பட்ட பாதையிலும் பார்க்க உயர்ந்தளவிலான பாதையொன்றில் செலுத்தக்கூடும். புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பண்ட விலைகள் மீதான நிரம்பல் இடையூறுகள் என்பவற்றின் தாக்கம் உலகளாவிய எண்ணெய் விலைகள் மற்றும் வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளி போன்ற குறிகாட்டிகளில் குறிப்பிட்டதோர் அளவிற்கு ஏற்கனவே உள்வாங்கப்பட்டுள்ளது. இருப்பினும், உலகளாவிய புவிசார் அரசியல் மற்றும் பேரண்டப்பொருளாதாரச் சூழ்நிலைகள் என்பன வழக்கத்திற்கு மாறாக தளம்பல்தன்மையினைக் கொண்டுள்ளதுடன், உலகளாவிய பண்ட விலைகள் மீதான மேலும் மேல்நோக்கிய தாக்கம் மற்றும்

தளம்பல்தன்மை என்பன இன்னமும் காணப்படக்கூடும். அடிப்படை எறிவுகள் 2025 காலப்பகுதியில் இலங்கை ரூபாவின் படிப்படியான பெறுமதித்தேய்வொன்றினை ஊகிக்கின்றன. இத்தகைய பெறுமதித்தேய்வு அழுத்தங்கள் அடிப்படை எறிவுகளில் கருத்திற்கொள்ளப்பட்ட மட்டங்களினை விஞ்சிச்செல்கின்ற ஏதேனும் சாத்தியப்பாடானது பணவீக்க அழுத்தங்களுக்குப் பங்களிக்கக்கூடும். கேள்வி அழுத்தங்களின் படிப்படியான கட்டியெழுப்பலானது எதிர்வருகின்ற காலப்பகுதியில் பணவீக்கத்தின் எதிர்பார்க்கப்பட்ட இயல்புநிலைத் திரும்பலினை உந்தச்செய்கின்ற முக்கிய காரணியொன்றாகத் தொடர்ந்தும் காணப்படுகின்றது. உயர்ந்தளவிலான கொடுகடன் விரிவாக்கமொன்று அண்மைய மாதங்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் கொடுகடன் தொடர்ந்து விரிவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. தனியார் துறைக்கான கொடுகடன் வளர்ச்சியில் விரைவான துரிதப்படுத்தலொன்று எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க உயர்ந்தளவிலான கேள்வி அழுத்தங்களுக்கு வழிவகுக்கக்கூடும். மேலும், அண்மையில் பதிவுசெய்யப்பட்ட எதிர்பாராத வானிலைப் போக்குகளிற்கு மத்தியில், வேளாண்மை உற்பத்தியை எதிர்மறையாகப் பாதிக்கின்ற ஏதேனும் பாதகமான வானிலை நிலைமைகள் உணவுப் பணவீக்கத்தில் மேல்நோக்கிய அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடும். மேலும், காலநிலை மாற்ற விளைவுகளுடன் இணைந்த ஏதேனும் வானிலைசார் பின்விளைவுகளும் வலு உருவாக்கத்திற்கு நீர் மின்சாரத்தில் தங்கியிருப்பதனையும் வேளாண்மை நடவடிக்கைகளையும் பாதித்து, வலு மற்றும் உணவு விலைகள் ஆகிய இரண்டிற்கும் மேல்நோக்கிய இடர்நேர்வுகளை உருவாக்கக்கூடும்.

கீழ்நோக்கிய இடர்நேர்வுகளைக் கருத்திற்கொள்ளும் போது, அண்மைக் காலத்தில், ஆரோக்கியமான அறுவடையொன்றிற்கு மத்தியில் உணவு விலைகளில் சாத்தியமான மேலதிக குறைப்புக்கள் ஏற்படக்கூடும். மேலும், புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் மேல்நோக்கிய தீர்வைத் திருத்தங்கள் என்பவற்றினால் உந்தப்பட்ட உலகளாவிய கேள்வியில் சாத்தியமான தொடர்ச்சியான மெதுவடைதலொன்று உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகளில் எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க அதிகளவிலான குறைவொன்றிற்கு வழிவகுக்கக்கூடும்.

தற்போதைய நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களிற்கமைய, பணவீக்க எறிவுகளிற்கான இடர்நேர்வுகள் அண்மைய காலம் மற்றும் நடுத்தர காலம் ஆகிய இரண்டிலும் சமநிலைப்படுத்தப்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளன.

பொருளாதார வளர்ச்சி எதிர்வுகூறல்களுக்கான இடர்நேர்வுகள்

அண்மைக் காலத்திலிருந்து நடுத்தர காலத்திற்கான வளர்ச்சி எறிவுகளிற்கான சாத்தியமான முக்கிய கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஏனையவற்றிற்கிடையில், வளர்ச்சி வாய்ப்புகளில் பாரியளவில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்ற ஐக்கிய அமெரிக்க தீர்வையுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மைகளை உள்ளடக்குகின்றன. ஐக்கிய அமெரிக்காவுக்கான இலங்கையின் ஏற்றுமதிகள் குறித்த ஐக்கிய அமெரிக்க தீர்வை மாற்றங்களின் துல்லியமான தாக்கமானது தொடர்ந்தும் தெளிவற்றதாகக் காணப்படுவதுடன் இது வெளிநாட்டுத் துறையின் செயலாற்றம், சந்தைச் செயலாற்றம், சந்தை மனோபாவங்கள் மற்றும் முதலீடுகள் என்பவற்றின் செயற்பாடுகளை மட்டுப்படுத்தக்கூடும். மேலும், வெளிநாட்டுக் கேள்வியின் ஒட்டுமொத்த ஸ்தம்பிதநிலை, ஒப்பீட்டு ரீதியிலான நன்மைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக உருவாக்கப்பட்ட நிச்சயமற்றதன்மை, மாற்று வர்த்தக இடங்களைத் தேடக்கூடிய நாடுகளிலிருந்து புதிய இறக்குமதிகளுடன் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் போட்டியிடுவதற்கான சாத்தியப்பாடு, மூலப்பொருட்கள் மற்றும் இடைநிலைப் பொருட்கள் என்பவற்றின் குறித்த சில இறக்குமதிகளின் விலை அதிகரிப்புக்கள் போன்ற பல ஏனைய வழிகளினூடாக இணைந்த உலகளாவிய பேரண்டப்பொருளாதார நிச்சயமற்றதன்மைகள் வெளிநாட்டுத் துறையினைப் பாதிக்க முடியும். மேலும்,

புவிசார் அரசியல் பதற்றங்களின் சாத்தியமான தீவிரமடைதல்கள் வெளிநாட்டுக் கேள்வியினைக் கீழ்நோக்கிச் சரியச்செய்தல், வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு மற்றும் பணவனுப்பல்களைத் தடுத்தல், மற்றும் சுற்றுலாத்துறையினையும் எதிர்மறையாகப் பாதிக்க முடியும். வானிலையுடன் தொடர்புடைய காரணிகளும் எதிர்வருகின்ற காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரச் செயலாற்றத்தில் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றக்கூடும். மேலும், இத்தகைய நிகழ்வுகளுக்கு வேளாண்மை உற்பத்தி மற்றும் உணவு தயாரிப்புத் துறைகளின் அதிகரித்த உணர்திறன் காரணமாக, காலநிலை மாற்றமானது நடுத்தர காலத்தில் இலங்கையின் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதிக்கலாம்.

நேர்மறையான பக்கத்தில், வேளாண்மைத் துறையில் எதிர்பார்த்ததிலும் பார்க்க சிறந்த மீட்சியானது அண்மைக் காலத்தில் வளர்ச்சியினைத் தூண்ட முடியும். மேலும், வளர்ச்சி மற்றும் ஏற்றுமதியினை ஊக்குவிக்கின்ற உபாயங்களின் விரைவான நடைமுறைப்படுத்தலானது நடுத்தர காலத்தில் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புக்களை மேம்படுத்தக்கூடும்.

2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு[8]

நடுத்தரகால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள்

2025 யூலையில் நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகளின் அடிப்படையில், இலங்கையின் முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளிக்கான தோற்றப்பாடானது 2025 பெப்புருவரி நாணயக் கொள்கை அறிக்கையில் பயன்படுத்தப்பட்ட 2025 சனவரியில் கிடைப்பனவாகவிருந்தவாறான தகவல்களுடன் ஒப்பிடுகையில் தேய்வடைந்துள்ளது. ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பிய வலயம் மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகியவற்றின் பொருளாதாரங்களுடன் தொடர்புடைய திருத்தப்பட்ட எறிவுகள் இம்மாற்றத்திற்கு முதன்மைக் காரணமாயமைந்தன. 2025 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகள் உணவு பணவீக்கத்திற்கான பாதையொன்றினை எதிர்வுகூறுகின்றதுடன், இது 2025 சனவரியில் நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் பாரியளவில் ஒத்ததாகக் காணப்படுகின்றது. ஐக்கிய அமெரிக்க தீர்வைகள் மற்றும் புவிசார் அரசியல் முரண்பாடுகளுடன் தொடர்புடைய இடையூறுகளுக்கு மத்தியில் உலகளாவிய கேள்வி மீதான தாக்கம் காரணமாக 2025 சனவரியில் எறிவுசெய்யப்பட்ட பாதையுடன் ஒப்பிடுகையில் உலக எண்ணெய் விலைகளின் பாதை கணிசமானளவு கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வின் எச்சரிக்கைமிக்க அணுகுமுறைக்கு மத்தியில், ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கைத் தளர்த்தலானது முன்னர் எறிவுசெய்யப்பட்டதிலும் பார்க்க தற்போது மெதுவாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2025 யூனில் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட நிதி செயல் நுணக்கக் கூற்று 2026 இன் அடிப்படையிலமைந்த தற்போதைய எறிவுகளில் இறைப் பாதையானது திருத்தப்பட்டுள்ளது. 2025 சனவரி மாத நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் இவ்விற்றைப்படுத்தலானது சற்று உயர்ந்தளவிலான ஒட்டுமொத்த பற்றாக்குறைப் பாதையினை உள்வாங்கின்ற வேளையில் ஆரம்ப மீதிப் பாதையினை நிலையானதன்மையில் பேணுகின்றது. அண்மைய தகவல்களுடன், 2025 சனவரி மாத நாணயக் கொள்கை சுற்றில் முன்னர் எதிர்பார்க்கப்பட்ட சிறியளவிலான பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டில் வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் மிகையொன்று எதிர்பார்க்கப்படுகின்றது.

[8] இப்பிரிவானது 2025 சனவரி மாத நாணயக் கொள்கை சுற்றில் பெறப்பட்ட 2025 பெப்புருவரியின் நாணயக் கொள்கை அறிக்கையில் வழங்கப்பட்ட எறிவுகளுடன் தற்போதைய எதிர்வுகூறல்களை ஒப்பிடுகின்றது.

வரைபடம் 06: உலகளாவிய எறிவுகள் (காலாண்டு)



குறிப்பு: அண்மைய உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பு எறிவுகளில், கவனத்திற்கொள்ளப்படும் நாடுகளிலிருந்து முழுமையான அடையப்பட்ட தரவுத் தொகுதி கிடைக்கும் வரை 2025 இன் முதலாம் காலாண்டு அதிகளவான அண்மையில் அடையப்பட்ட காலப்பகுதியாகக் கருதப்படும்.

மூலங்கள்: காலாண்டு எறிவு மாதிரி, உலக எறிவு மாதிரி வலையமைப்பு (2025/01/21 மற்றும் 2025/06/25 அன்று இற்றைப்படுத்தப்பட்டது.)

பணவீக்கப் பாதை

2025 பெப்புருவரி மாத நாணயக் கொள்கை சுற்றில் வெளியிடப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், 2025இன் முதலாம் காலாண்டில் அடையப்பட்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கமானது எறிவுசெய்யப்பட்ட மட்டத்தினைப் பரந்தளவில் சூழ்ந்து பதிவுசெய்யப்பட்டது. இருப்பினும், 2025இன் இரண்டாம் காலாண்டில் அடையப்பட்ட பணவீக்கமானது முன்னைய எறிவிலும் பார்க்கக் குறைவாகக் காணப்பட்டமைக்கு உணவு விலைகளின் மிதமடைதலுடன் இணைந்து மின்சார தீர்வைகளில் எதிர்பார்த்ததிலும் பார்க்க தாமதமான மேல்நோக்கியதொரு திருத்தம் மற்றும் எரிபொருள் விலைகளில் பல கீழ்நோக்கிய திருத்தங்கள் என்பன முதன்மைக் காரணமாயமைந்தன. இருப்பினும், 2025 யூனில் மின்சாரத் தீர்வைகளிற்கான மேல்நோக்கிய திருத்தமானது முன்னோக்கிச் செல்கையில் வலு மற்றும் போக்குவரத்துப் பணச்சுருக்கத்தினைத் தளர்வடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, 2025 சனவரி மாத நாணயக் கொள்கை சுற்றில் எறிவுசெய்யப்பட்ட பாதையுடன் ஒப்பிடுகையில் தாழ்ந்தளவிலான உலகளாவிய எண்ணெய்

விலைப் பாதை மற்றும் உணவு விலைகளின் தள்வடைதல் என்பன காரணமாக அண்மைக் காலத்திலான எறிவுகள் முன்னைய சுழற்சியிலும் பார்க்க தாழ்ந்தளவிலேயே காணப்படுகின்றன. முன்னைய எறிவினைப் போன்று, பணவீக்கமானது பொருளாதாரத்தில் மேம்பட்ட கேள்வி நிலைமைகளுடன் நடுத்தர காலத்தில் பணவீக்க இலக்கினை அண்மித்து படிப்படியாக உறுதிநிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மையப் பணவீக்கத்தின் நடுத்தர கால எறிவுகளைப் பொறுத்தவரை, மிகவும் சாதகமான அறியப்பட்ட தகவல்களினால் உந்தப்பட்ட உயர்ந்தளவிலான வளர்ச்சி எதிர்வுகூறலொன்றின் காரணமாக முன்னைய நாணயக் கொள்கை அறிக்கையுடன் ஒப்பிடுகையில் இது உயர்ந்தளவிலான மட்டமொன்றில் தொடர்ந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள்

3.1. பணவீக்கம்

அதிகரித்துச் செல்கின்ற உணவுப் பணவீக்கம் மற்றும் நிர்வாக ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிற்கான மேல்நோக்கிய சீர்திருத்தங்கள் என்பன காரணமாக பணச்சுருக்க நிலைமைகள் 2025 மாச்சிலிருந்து தளர்வடையத் தொடங்கின.

வரைபடம் 07: முதன்மை மற்றும் மைய பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)



மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2024 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட -1.7 சதவீதத்திலிருந்து 2025 சனவரியில் -4.0 சதவீதத்திற்குக் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தது. இச்சடுதியான வீழ்ச்சியானது 2024 சனவரியில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரிக் கட்டமைப்பிற்கான மாற்றங்களிலிருந்து தோற்றம்பெற்ற புள்ளிவிபரத் தளத் தாக்கங்களினால் முக்கியமாக உந்தப்பட்டுக் காணப்பட்டது. 4.2 சதவீதத்திலான மிகவும் உயர்ந்தளவிலான பணச்சுருக்க மட்டமானது 2025 பெப்புருவரியில் பதிவுசெய்யப்பட்டது. 2025 சனவரி மாத நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைகளின் கீழ்நோக்கிய திருத்தத்தினால் இது உந்தப்பட்டது. இருப்பினும், உணவுப் பணவீக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உந்தப்பட்டு பணச்சுருக்க நிலைமைகள் 2025 மாச்சிலிருந்து தளர்வடையத் தொடங்கின. 2025 யூன் நடுப்பகுதியில் மின்சாரத் தீர்வைகளின் மேல்நோக்கிய திருத்தம் மற்றும் புள்ளிவிபரத் தளத் தாக்கங்களிலிருந்தான நேர்மறையான பங்களிப்பு என்பன பணச்சுருக்கத்தினைத் தளர்த்தத் துணைபுரிந்தன. இம்முன்னேற்றங்களிற்கு மத்தியில், முதன்மைப் பணவீக்கமானது 2025 யூன் மாதமளவில் எதிர்மறையான வீச்சில் தொடர்ந்து காணப்பட்டு, -0.6 சதவீதத்தினை (ஆண்டிற்காண்டு) பதிவுசெய்தது.[9] 2025 யூனில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த உணவுப் பணவீக்கமானது 4.3 சதவீதத்தில் (ஆண்டிற்காண்டு) நேர்மறையாகத் தொடர்ந்து காணப்பட்ட வேளையில், உணவல்லாப் பணவீக்கமானது எதிர்மறையான வீச்சில் தொடர்ந்து காணப்பட்டு, -2.8 சதவீதத்தினைப் (ஆண்டிற்காண்டு) பதிவுசெய்தது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2025இன் முதலரைப் பகுதியில் ஒட்டுமொத்த மேல்நோக்கிய போக்கொன்றினைக்

[9] 2025 யூலையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) -0.3 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

காட்டியது. தொடர்ச்சியான எட்டு மாத கால பணச்சுருக்கத்திற்குப் பின்னர், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது அதிகரித்துச் செல்கின்ற உணவு விலைகளினால் உந்தப்பட்டு 2025 மேயில் நேர்மறையாகத் திரும்பலடைந்ததுடன் 2025 யூனில் 0.3 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

வரைபடம் 08: முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

வரைபடம் 09: துணைவகைரீதியான ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)



குறிப்பு: கொ.நு.வி.சு கூடையின் துணை வகைகளின் எடைகள் அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டுள்ளன.
மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

மாதாந்த அடிப்படையொன்றில், 2025 சனவரியில் மின்சாரத் தீர்வைகளிற்கு மேற்கொள்ளப்பட்ட கீழ்நோக்கிய திருத்தம் காரணமாக 2025 சனவரியில் பதிவுசெய்யப்பட்ட சிறியளவிலான நேர்மறையினைத் தொடர்ந்து கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த முதன்மைப் பணவீக்கமானது 2025 பெப்புருவரியில் எதிர்மறையாகத் திரும்பலடைந்தது. இது பெரும்போக அறுவடை காரணமாக தளர்வடைகின்ற உணவு விலைகளினால் 2025 மாச்சு தொடக்கம் ஏப்பிறல்

வரையிலான காலப்பகுதியில் தொடர்ந்தும் எதிர்மறையில் காணப்பட்டது. இருப்பினும், உணவு விலைகளின் அதிகரிப்பு மற்றும் 2025 யூன் நடுப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட மின்சாரத் தீர்வைகளிற்கான மேல்நோக்கிய திருத்தம் என்பவற்றினால் உந்தப்பட்டு, 2025 மேயிலிருந்து நேர்மறையாகத் திரும்பலடைந்தது.

வரைபடம் 10: மாதாந்த முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)



மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

வரைபடம் 11: முதன்மைப் பணவீக்க நிழற்படம் (கொ.நு.வி.சுட்டெண், ஆ-ஆ, %)



குறிப்பு: 2023 சனவரிக்கு முன்னரான தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டுள்ளன (2013 = 100). அதேவேளை 2023 சனவரியிலிருந்து தொடங்கும் தரவுகள் கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டுள்ளன (2021 = 100). அடிப்படை எடைகள் கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்டு (2021 =100) அடைப்புக்குறிக்குள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துணை வகையிலிருக்கும் உயரம் அவ்வகையின் ஒப்பீட்டளவிலான அடிப்படை உயரத்தை வழங்குகின்றது.

மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

சிறப்புக்குறிப்பு ஆ: பணிகள் பணவீக்கத்தைப் புரிந்துகொள்ளல்: இது முக்கியம்பெறுவது ஏன்?

பணிகள் பணவீக்கத்தை கண்காணிப்பதன் முக்கியத்துவம்

பணிகள் பணவீக்கம் என்பது பணிகளின் விலைகளில் உள்ள அதிகரிப்பு வீதத்தைக் குறிக்கின்றது. நிரம்பலால் உந்தப்படும் காரணிகள் அல்லது உலகளாவிய பண்டங்களின் விலைகளின் ஏற்றத்தாழ்வுகள் போன்ற வெளிநாட்டு அதிர்வுகளுக்கு விரைவாக பதிலளிக்கும், பொருட்களின் விலைகளைப் போன்றல்லாமல், பணிகளின் விலைகள் அடிப்படையிலேயே மிகவும் படிப்படியாக சீராக்கமடைந்து அதிகளவிலான நீடித்ததன்மையை வெளிப்படுத்துகின்றன. இது பெரும்பாலும் ஏனெனில், இப்பணிகளின் விலைகள் உள்நாட்டு காரணிகளான கூலிகள், வாடகைகள், ஆரோக்கியப்பராமரிப்பு மற்றும் கல்வி போன்ற மெதுவாக சீராக்கமடைய முனைகின்றதும் குறுங்கால அதிர்வுகளுக்கு குறைந்தளவில் பதிலிறுப்பனவாகவும் உள்நாட்டு விடயங்களுடன் நெருங்கிய தொடர்பைக்கொண்டுள்ளமையாலாகும் (Amatyakul et al (2024), Bils & Klenow (2004) and Jangam et al (2024). மேலும், தாழ்ந்த மாற்றீடும் ஒப்பந்த ரீதியான வரையறைகளும் பொதுவாக பணிகள் பணவீக்கத்தை குறைந்த தளம்பல்மிக்கதாகவும் அதிக நீடித்ததன்மை மிக்கதாக மாற்றுகின்றன. அத்துடன், பணிகள் பணவீக்கமானது பொதுவாக உலகளாவிய பண்டங்களின் விலைகளால் குறைந்தளவில் பாதிக்கப்படுவதால், உள்நாட்டு பணவீக்க அழுத்தங்கள் மற்றும் கேள்வி நிலைமைகளின் குறிகாட்டியாக செயற்படுகின்றது. இப்போக்கைப் பிரதிபலிக்கும் வகையில், அடிப்படையானதும் உறுதியானதுமான பணவீக்கப் போக்குகளை மிகச்சிறப்பாக விளங்கிக்கொள்ள மேம்பட்ட பொருளாதாரங்கள் அதேபோன்று வளர்ந்துவரும் பொருளாதாரங்களின் மத்திய வங்கிகள் பணிகள் பணவீக்கத்தை கண்காணித்தல் மற்றும் பகுப்பாய்வுசெய்தல் தொடர்பாக அதிக அவதானம் செலுத்துகின்றன.

இலங்கையில் பணிகள் பணவீக்கத்தின் போக்குகள்

இலங்கையில், நுகர்வோர் கூடையின்[1] ஏறத்தாழ அரைப்பகுதியை சேவை சார்ந்த கூறுகள் வகை கூறி ஒட்டுமொத்த (முதன்மை) பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச்செலவின் மீது பணிகளின் விலைகள் கணிசமானளவு தாக்கத்தைக் கொண்டுள்ளன. பணவீக்க இயக்கவாற்றல்களை புரிந்துகொள்வதற்கும் எதிர்வுகூறல் மாதிரிகளின் துல்லியத்தன்மையை மேம்படுத்துவதற்கும் மற்றும் அதிக வினைத்திறன்மிக்கதும் காலத்திற்கேற்ற கொள்கைத் தலையீடுகளை இயலச்செய்வதற்கும் பணிகள் துறைகளின் விலைகளை கண்காணிப்பபதை பலப்படுத்தல் முக்கியமானதாகும்.[2]

வரைபடம் ஆ.1 ஆனது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணிலிருந்து (2013=100 மற்றும் 2021=100) பெறப்பட்ட2015-2025(யூலை வரை) காலப்பகுதியின் போது இலங்கையில் ஆண்டிற்காண்டு பணிகள் பணவீக்கத்தை காட்டுகின்றது. வரைபடம் அதனோடு இணைந்த புள்ளிவிபர அளவீடுகளின் மூலம் குறித்துக்காட்டப்பட்டுள்ளவாறு முதன்மைப் பணவீக்கம் மற்றும் பணிகளல்லாப் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் பணவீக்கமானது ஒப்பீட்டளவில் நிலையானதாக காணப்பட்டுள்ளதுடன். மேலும், அண்மைக்காலப் போக்குகளைக் கவனத்திற்கொள்கின்ற போது, பணிகளல்லாப் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் 2024 மற்றும் 2025 இதுவரையில் பணிகள் பணவீக்கமானது உயர்மட்டத்தில் காணப்பட்டமை இக்காலப்பகுதியில் முதன்மைப் பணவீக்கத்தை தாழ்ந்த நிலையில் பேணுவதில் நிரம்பலால் உந்தப்படும் விடயங்களின் தாக்கத்தை மேலும் வலியுறுத்தியது.

வரைபடம் ஆ.1 ஆனது முதன்மைப் பணவீக்கத்திற்கான பணிகள் பணவீக்கம், உணவுப் பணவீக்கம், மற்றும் வலு மற்றும் எரிபொருள் பணவீக்கம் என்பவற்றின் பங்களிப்பை எடுத்துக்காட்டுகின்றது. கொ.நு.விலைச் சுட்டெண் கூடையின் அதன் தொடர்ச்சியான எடையைச் சுட்டிக்காட்டி, முதன்மைப் பணவீக்கத்திற்கான பணிகள் பணவீக்கத்தின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் அதிககாலம் நிலையானதாக காணப்பட்டுள்ளது. அண்மைய மாதங்களில், பணிகள் பணவீக்கமானது ஒட்டுமொத்த பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய செல்வாக்கை உட்செலுத்தியது. அதேவேளை, வலு மற்றும் எரிபொருள் பணவீக்கமானது அண்மைக்கால பணச்சுருக்கப் போக்கைப் பிரதிபலித்து கைீழ்நோக்கிய செல்வாக்கை உட்செலுத்தியுள்ளது.

[1] பணிகள் சார்ந்த கூறுகானது அனைத்துமட்ட (முதன்மை) பொருட்கள் மற்றும் சேவைகளின் (2013=100 மற்றும் 2021=100) கொ.நு.சு கூடையிலிருந்து நோக்கத்திற்கேற்ப தனிப்பட்ட நுகர்வின் வகைப்பாட்டைப் பயன்படுத்தி எடுக்கப்பட்டுள்ளன.

[2] பணிகள் பணவீக்கத்தின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொள்ளும் போது, பணிகளின் விலைகளின் கிரமமானதும் முறைமைப்படுத்தப்பட்டதுமான கண்காணிப்பை ஏற்படுத்தல் அவசிமாகும்.

வரைபடம் ஆ.1 கொ.நு.வி.சுட்டெணின் அசைவு (2013=100 மற்றும் 2021=100) (ஆண்டிற்கு ஆண்டு)



	பணிகள்	முதன்மை	பணிகள் நீங்கலான
சராசரி பணவீக்கம் (AVG, %)	6.6	9.3	11.8
நியம விலகல் (Standard Deviation (STD), %)	7.9	15.8	23.0
மாறற்குணகம் (Coefficient of Variation (STD/AVG, Ratio))	1.2	1.7	1.9

மூலங்கள்: தொகமைதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

வரைபடம் ஆ.2 ஆனது முதன்மைப் பணவீக்கத்திற்கான பணிகள் பணவீக்கம், உணவுப் பணவீக்கம், மற்றும் வலு மற்றும் எரிபொருள் பணவீக்கம் என்பவற்றின் பங்களிப்பை எடுத்துக்காட்டுகின்றது. கொ.நு.விலைச் சுட்டெண் கூடையின் அதன் தொடர்ச்சியான எடையைச் சுட்டிக்காட்டி, முதன்மைப் பணவீக்கத்திற்கான பணிகள் பணவீக்கத்தின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் அதிககாலம் நிலையானதாக காணப்பட்டுள்ளது. அண்மைய மாதங்களில், பணிகள் பணவீக்கமானது ஒட்டுமொத்த பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய செல்வாக்கை உட்செலுத்தியது. அதேவேளை, வலு மற்றும் எரிபொருள் பணவீக்கமானது அண்மைக்கால பணச்சுருக்கப் போக்கைப் பிரதிபலித்து கைழ்நோக்கிய செல்வாக்கை உட்செலுத்தியுள்ளது.

வரைபடம் ஆ.2: முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண் 2013=100 மற்றும் 2021=100)



மூலங்கள்: தொகமைதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம், மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

பணிகள் பணவீக்கத்தின் பண்புகளானவை முதன்மைப் பணவீக்கத்தை வடிவமைத்தல் மற்றும் விலையுறுதிப்பாட்டைப் பேணும் அதன் முக்கியமான வகிபாகத்துடன் அனைத்துமட்ட பணவீக்கத்தை கண்காணித்தல் மற்றும் கொள்கைஉருவாக்க கட்டமைப்பிற்கான அதன் இயக்கவாற்றல்களை அதிக வெளிப்படைத்தன்மையாக ஒருங்கிணைக்கும் முக்கியத்துவத்தைக் குறித்துக்காட்டுகின்றது.

References:

1. Amatyakul, P., Igan, D., & Lombardi, M. J. (2024, March 4). Sectoral price dynamics in the last mile of post-Covid-19 disinflation. *BIS Quarterly Review*. Bank for International Settlements.
2. Bils, M., & Klenow, P. J. (2004). Some evidence on the importance of sticky prices. *Journal of Political Economy*, *112(5),* 947–985.
3. Jangam, P., Rath, B. N., & Perera, S. (2024, September 6). *Analyzing price rigidity and price convergence in the services sector of Sri Lanka* [Paper presentation]. 5th CBSL-ADBI-APAEA Joint Workshop, Central Bank of Sri Lanka. URL
4. United Nations Statistics Division. (2018). *Classification of Individual Consumption According to Purpose (COICOP) 2018*. United Nations.

பொருளாதாரத்தில் அடிப்படைப் பணவீக்கப் போக்குகளினைப் பிரதிபலிக்கின்ற கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2025 மாச்சு வரை தொடர்ந்து தளர்வடைந்து காணப்பட்டது. அதன்பின்னர், இது படிப்படியாக வேகமடையத் தொடங்கி, 2025 யூனில் 1.5 சதவீதத்தினை எட்டியது.[10] மேலும், மையப் பணவீக்கக் கூடையிலிருந்து விலக்கப்பட்டுள்ள தளம்பலடைகின்ற உணவு விலை மற்றும் வலுவுடன் தொடர்புடைய விலை அதிகரிப்புக்களினால் இத்தகைய நடத்தை பாரியளவில் உந்தப்பட்டமையினால் 2025 மாச்சில் பதிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கத்தின் சடுதியான திரும்பலானது மையப் பணவீக்கத்தில் புலப்படவில்லை. அதேவேளையில், 2025 சனவரி தொடக்கம் ஏப்பிறல் வரையான காலப்பகுதியில் எதிர்மறையாகத் திரும்பலடைந்த தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) மீண்டும் நேர்மறையான வீச்சிற்குள் நகர்ந்து, 2025 யூனில் 0.6 சதவீதத்தினைப் பதிவுசெய்தது.

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2024இன் நான்காவது காலாண்டு மற்றும் 2025இன் முதலாவது காலாண்டு என்பவற்றில் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளிற்கு நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட வீச்சிற்கு அதிகமாக 5 சதவீத பணவீக்க இலக்கிலிருந்து கீழ்ப் பக்கத்திலிருந்து விலகலடைந்து காணப்பட்டமையினால் மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் கீழ் தேவைப்படுத்தப்பட்ட அறிக்கையானது கௌரவ நிதி அமைச்சரினூடாகப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.[11] இது மத்திய வங்கியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அத்தகைய அறிக்கைகளில் மூன்றாவதாகக் காணப்பட்டதுடன், அரசாங்க நிதி பற்றிய குழுவில் கலந்தாலோசிக்கப்பட்டதுடன், அதனைத்தொடர்ந்து அறிக்கை பொதுமக்களிற்குக் கிடைப்பனவாகவும் காணப்பட்டது. மேலும், காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 2025இன் இரண்டாம் காலாண்டிலும் 2 சதவீத புள்ளிகளிற்கு அதிகமாக பணவீக்க இலக்கிற்குக் கீழாகத் தொடர்ந்து காணப்பட்டமையினால் மத்திய வங்கிச் சட்டத்தின் 26(5) ஆம் பிரிவின் கீழான மற்றொரு பின்தொடர் அறிக்கையும் உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும். முன்னைய பல காலாண்டுகளிற்கு நிகராக, 2025இன் முதலாவது காலாண்டு மற்றும் இரண்டாவது காலாண்டு ஆகியவற்றில் இலக்கிலிருந்தான முதன்மைப் பணவீக்கத்தின் விலகலானது நிரம்பல் பக்கக் காரணிகளினால் குறிப்பாக, வலு விலைகளில் குறிப்பிடத்தக்க குறைப்புக்களினால் முக்கியமாக உந்தப்பட்டது.

தற்போது கிடைப்பனவாகவுள்ள தகவல்களிற்கமைய,[12] முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) ஆகிய இரண்டும் 2025 காலப்பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

2024இல் பதிவுசெய்யப்பட்ட பெயரளவுக் கூலிகளின் மேல்நோக்கிய போக்கினைத் தொடர்ந்து, பெயரளவு முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது 2025 சனவரி தொடக்கம் மே வரையான காலப்பகுதியில் ஒட்டுமொத்த அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. வேளாண்மை, கைத்தொழில் மற்றும்

[10] 2025 யூலையில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (2021=100)இன் அடிப்படையிலமைந்த மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 1.6 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

[11] பணவீக்கம் அதன் இலக்கிலிருந்து விலகியமை பற்றிய அறிக்கை - 2024இன் நான்காம் காலாண்டு மற்றும் 2025இன் முதலாம் காலாண்டு குறித்த அறிக்கையினை மத்திய வங்கியின் இணையத்தளத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

[12] இப்பிரிவிலுள்ள தகவல்கள் முதன்மையாக மத்திய வங்கியின் மூலம் தொகுக்கப்பட்ட பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100) மற்றும் முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) என்பவற்றின் அடிப்படையிலமைந்துள்ளன.

பணிகள் துறை நடவடிக்கைகளில் கூலி வளர்ச்சியானது தெளிவாகப் புலப்பட்டது. வேளாண்மைத் துறையானது கூலிகளில் உயர்ந்தளவிலான அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்குக் குறித்த சில வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட தொழிலாளர் பற்றாக்குறைகள் காரணமாக கூலிகள் மீதான மேல் நோக்கிய அழுத்தம் முதன்மைக் காரணமாயமைந்தது. அதேவேளை, ஆண்டிற்கு ஆண்டிற்காண்டு அடிப்படையொன்றில், உண்மை முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணானது பணச்சுருக்க நிலைமைகளின் தளர்வடைதலுடன் இசைந்து செல்லும் விதத்தில் அதே காலப்பகுதியில் குறைவடைந்து காணப்பட்டது.

பொதுத் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2016=100)இனால் அளவிடப்பட்டவாறு, பொதுத் துறை ஊழியர்களின் பெயரளவு கூலிகள் 2024இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படிச் சீராக்கத்தின் நிலுவைத் தொகைகளிற்கான கொடுப்பனவுகளின் தொடக்கத்தின் முதன்மைக் காரணத்தினால் 2025இன் இதுவரையான காலப்பகுதியில் 13.7 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்ததுடன், இவை 2025 சனவரியிலிருந்து ஆரம்பிக்கின்ற மூன்று சம தவணைகளில் செலுத்தப்பட்டன. மேலும், 2025இன் வரவு செலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு, குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தினை அதிகரிப்பதன் மூலம் மற்றும் பல்வேறு படிகளை நெறிப்படுத்துவதன் மூலம் பொதுத் துறைச் சம்பளக் கட்டமைப்பில் திருத்தமொன்று மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், இக்காலப்பகுதியில் பெயரளவு மற்றும் உண்மை ஆகிய இரண்டினதும் கூலி வளர்ச்சி மெதுவடைந்து காணப்பட்டதுடன், தளர்வடைகின்ற பணச்சுருக்க நிலைமைகளின் விளைவொன்றாக உண்மைக் கூலி வளர்ச்சி சடுதியான வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

வரைபடம் 12: முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத்துறை கூலிவீதச் சுட்டெண்ணின் (2016=100) அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

3.2. உண்மைத் துறை

நிலையான வளர்ச்சிப் பாதையை பிரதிபலித்து, இலங்கைப் பொருளாதாரமானது 2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் அதன் நேர்மறையான உத்வேகத்தை தக்கவைத்துக்கொண்டது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் படி, வேளாண்மை நடவடிக்கைகள் சிறிதளவு சுருக்கத்தைப் பதிவுசெய்த போதிலும் கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் நேர்மறையான செயலாற்றத்தினால் உந்தப்பட்டு இலங்கைப்

பொருளாதாரமானது 2025ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 4.8 சதவீத (ஆண்டிற்காண்டு) வளர்ச்சியைப் பதிவுசெய்தது.

கைத்தொழில் நடவடிக்கைகளில் வளர்ச்சி முக்கியமாக தயாரிப்பு மற்றும் கட்டுமான நடவடிக்கைகளால் உந்தப்பட்ட அதேவேளை பணிகள் நடவடிக்கைகளின் வளர்ச்சிக்கு நிதியியல் பணிகளும் தங்குமிட பணிகளும் முக்கிய பங்களிப்பாளர்களாக காணப்பட்டன. அதேவேளை, வேளாண்மை நடவடிக்கைகளில் ஏற்பட்ட சுருக்கத்திற்கு எண்ணெய் சார்ந்த பழங்கள் மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கைகளில் ஏற்பட்ட சரிவு பிரதான காரணமாகியது.

அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான மதிப்பீடுகள் (ஆண்டிற்கு ஆண்டு, %) (தற்காலிகமானது)

பொருளாதார நடவடிக்கை	2024					2025
	கா1	கா2	கா3	கா4	ஆண்டிற்கான	கா1
வேளாண்மை	0.9	2.7	3.7	-2.2	1.2	-0.7
கைத்தொழில்	11.2	9.7	10.1	13.1	11.0	9.7
பணிகள்	2.5	1.9	2.6	2.5	2.4	2.8
மொத்த உள்நாட்டு உற்பத்தி	**5.1**	**4.1**	**5.3**	**5.4**	**5.0**	**4.8**

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

மூன்று முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் சாதகமான பங்களிப்புகளால் ஆதரிக்கப்பட்டு 2025இன் இரண்டாம் காலாண்டில் பொருளாதாரத்தில் நிலையான வளர்ச்சியொன்றை முன்கூட்டிய குறிகாட்டிகள் காண்பிக்கின்றன. ஏப்பிறல்-மே மாதகாலப்பகுதியில் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்த அதேவேளை தயாரிப்பு மற்றும் கட்டுமானத்திற்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் ஏப்பிறல் மாதத்தில் பதிவுசெய்யப்பட்ட பருவகால சரிவுக்குப் பிறகு மீளெழுச்சியடைந்தன.[13] இவற்றுடன், கைத்தொழில்சார் குறிகாட்டிகள் தொடர்ச்சியான மேம்பாட்டைக் காண்பித்தன. பணிகள் நடவடிக்கைகளைப் பொறுத்தவரை, பணிகளுக்கான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் துறையின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தைக் குறித்துக்காட்டி 2025இன் இரண்டாம் காலாண்டில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. அதேவேளை, 2025ஆம் ஆண்டு ஏப்பிறல்-மே காலகட்டத்தில் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சி மற்றும் 2025 சிறுபோகப் பருவத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் ஆரோக்கியமான நெல் அறுவடை ஆகியவற்றை பிரதிபலிக்கும் வகையில், 2025இன் இரண்டாம் காலாண்டில் வேளாண்மை நடவடிக்கைகளில் மீளெழுச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

[13] அண்மைய தரவு வெளியீட்டின்படி, கட்டுமான நடவடிக்கைகளின் தொடர்ச்சியான விரிவாக்கமொன்றைக் குறித்துக்காட்டி, 2025 யூனில் கட்டுமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் மொத்த நடவடிக்கைச் சுட்டெண் 58.6ஆக காணப்பட்டது. இதேவேளை, 2025 மேயில் 98.2ஆக காணப்பட்ட கைத்தொழில்சார் உற்பத்திச் சுட்டெண் 2025 யூனில் 98.5ஆக மேம்பட்டது.

வரைபடம் 13: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் மற்றும் கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண் அசைவுகள்



மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

செலவினப்பக்கத்தைப் பொறுத்தவரை, நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள் இரண்டும் 2025ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் நிலையான விலைகளில் உள்நாட்டுக் கேள்விக்கு நேர்க்கணியமாகப் பங்களித்த அதேவேளை பொருட்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதியில் ஏற்பட்ட உயர்வான வளர்ச்சி காரணமாக தேறிய வெளிநாட்டுக் கேள்விச் சுருக்கத்தைப் பதிவு செய்தது. 2025ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், நுகர்வு மற்றும் முதலீட்டுச் செலவினங்கள் பொருளாதாரத்திற்கு நேர்க்கணியமாகப் பங்களிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை தேறிய வெளிநாட்டுக் கேள்வி நிலையான விலைகளில் சுருக்கமொன்றைக் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

அட்டவணை 02: கூட்டுக் கேள்வி (தற்காலிகமானது)

விடயம்	நிலையான (2015) விலைகள்					
	2024		2024 கா1		2025 கா1	
	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %	ரூ. பில்	ஆண்டிற்கு ஆண்டு, %
உள்நாட்டு கேள்வி	12,617	7.1	3,294	5.0	3,504	6.4
நுகர்வு	9,478	3.2	2,159	-7.8	2,302	6.6
முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்)	3,139	21.1	1,135	42.8	1,202	5.9
தேறிய வெளிநாட்டுக் கேள்வி	-144.0	-243.2	25	13.8	-27	-208.2
+ பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள்	3,020	12.5	779	19.3	828	6.3
- பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள்	3,164	22.5	754	19.5	854	13.3
மொத்த உள்நாட்டு உற்பத்தி	**12,472**	**5.0**	**3,319**	**5.1**	**3,477**	**4.8**

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

3.3. நாணயத் துறை

வட்டி வீதங்கள்

தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்குப் பதிலிறுத்தும் வகையில், 2025 யூன் நடுப்பகுதியிலிருந்து அரச பிணையங்கள் மீதான விளைவுகளில் சிறு அதிகரிப்பொன்று காணப்பட்ட போதிலும், சந்தை வட்டி வீதங்களில் பரந்தளவிலான கீழ்நோக்கிய சீராக்கமொன்று அவதானிக்கப்பட்டது.

2025 மே இல் ஓரிரவு கொள்கை வீதத்தின் குறைப்பிற்கு அமைய, குறுங்கால சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி சீராக்கமடைந்த அதேவேளை சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது தொடர்ந்தும் ஓரிரவு கொள்கை வீதத்தைச் சுற்றியமைந்து காணப்பட்டது. பணச் சந்தை வீதங்களில் ஏற்பட்ட சரிவைத் தொடர்ந்து, சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதம் தொடர்ந்தும் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டு 2025 யூன் இறுதியில் 8.22 சதவீதத்தைப் பதிவு செய்து, இதுவரையான ஆண்டுக் காலப்பகுதியில் 70 அடிப்படை புள்ளிகளினால் சரிவடைந்தது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கையின் ஊடுகடத்தலினை பிரதிபலித்து, ஏனைய சந்தைக் கடன் வழங்கல் மற்றும் வைப்பு வட்டி வீதங்கள் தொடர்ந்தும் கீழ்நோக்கிச் சீராக்கப்பட்டன. அதேவேளை, சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான வீதத்தால் பிரதிபலிக்கப்படும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளிற்கு வங்கிகளினால் வழங்கப்பட்ட புதிய கடன்களுக்கான வட்டி வீதங்களும் 2025 சனவரி-மே காலப்பகுதியில் குறிப்பிடத்தக்களவிலான சரிவைப் பதிவுசெய்தன.

வரைபடம் 14: ஓரிரவு கொள்கை வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதங்களில் அசைவுகள்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

சந்தை வட்டி வீதங்களில் ஒட்டுமொத்தக் குறைப்பு இருந்தபோதிலும், சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்கும் வைப்பு வீதங்களுக்கும் இடையிலான பரவலானது அதன் நெருக்கடிக்கு முன்னரான வரலாற்றுச் சராசரியுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் தொடர்ச்சியாக அதிகமாக காணப்படுவதுடன் கடன் வழங்கல் வட்டி வீதங்களுடன் ஒப்பிடுகையில் வைப்பு வட்டி வீதங்களில் அதீத குறைப்பையும், தெரிவுசெய்யப்பட்ட கடன் சாதனங்களின் மீது அறவிடப்படும் ஒப்பீட்டளவிலான அதிக வட்டி

வீதங்களையும் பகுதியளவில் பிரதிபலிக்கின்றது. சந்தைக் கடன் வழங்கல் வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படும் மேலதிக குறைப்புடன், பரவல் இயல்புநிலையடைதல் எதிர்வரும் காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது.

வரைபடம் 15: தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

தாழ்ந்த பணவீக்கச் சூழல் மற்றும் 2025 மே இல் கொள்கை வீதக் குறைப்பு என்பனவற்றால் ஆதரிக்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டின் சனவரியிலிருந்து யூலை வரையிலான காலப்பகுதியில் முதலாந்தர ஏலங்களில் அனைத்து முதிர்வு காலங்களிலும் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு வீதங்கள் 90-100 அடிப்படை புள்ளிகளினால் குறைவடைந்துள்ளன. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைகள் ஆகிய இரண்டிலும் நீண்ட கால விளைவு வீதங்கள் சரிவடைந்துள்ளமையினால் 2025 யூன் இறுதியளவில் இயல்பாக்கப்பட்ட விளைவு வளையியொன்றிற்கு திரும்பலடைந்தது. இருப்பினும், விளைவு வளையியில் சிறியளவிலான அதிகரிப்பொன்று 2025 யூன் நடுப்பகுதியிலிருந்து பதிவுசெய்யப்பட்டது.

அதேவேளை, 2025 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதி முழுவதும் உண்மை வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் தொடர்ச்சியாக உயர்வடைந்து காணப்பட்டன. இருப்பினும், பணச்சுருக்கம் தளர்வடைதல் மற்றும் சந்தை வட்டி வீதங்களின் கீழ்நோக்கிய சீராக்கல் என்பவற்றின் ஒருங்கிணைந்த தாக்கத்தின் காரணமாக, உண்மை வட்டி வீதங்கள் அண்மையில் சரிவொன்றைக் கண்டன. எதிர்வரும்காலத்தில், எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தின் இலக்கை நோக்கிய ஒருங்கிணைப்புடன் உண்மை வட்டி வீதங்கள் மேலும் தளர்வடைவதற்கான சாத்தியக்கூறு காணப்படுகின்றது.

வரைபடம் 16: அவதானிக்கப்பட்ட உண்மை வட்டி வீதங்கள்

உண்மை வைப்பு வட்டி வீதங்கள் **உண்மை கடன் வழங்கல் வட்டி வீதங்கள்**



குறிப்பு: மாதாந்த உண்மை வட்டி வீதம் ஆண்டிற்கு அண்டு முதன்மைப் பணவீக்க வீதத்திற்கான பெயரளவு வட்டி வீதத்தை சீராக்குவதன் மூலம் பெறுவிக்கப்படுகின்றது (கொ.நு.வி.சு – அடிப்படையாகக் கொண்டது)

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுப் பணச் சந்தைத் திரவத்தன்மை

2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் உள்நாட்டுப் பணச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் தொடர்ந்து மிகையாக காணப்பட்டன.

திரவத்தன்மைப் பற்றாக்குறைகளை எதிர்கொண்ட பங்கேற்பு நிறுவனங்களால் சந்தைகளின் மூலம் அதன் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிந்ததுடன் உள்நாட்டு பணச் சந்தையில் தொடர்ந்து காணப்பட்ட மிகையான திரவத்தன்மை நிலைமைகள், 2025 சனவரி இறுதியிலிருந்து மத்திய வங்கியானது அதன் திறந்த சந்தைச் நடவடிக்கைகளை முழுமையாகக் குறைக்க உதவியது. மத்திய வங்கியின் தேறிய அந்நியச் செலாவணிக் கொள்வனவுகளின் விளைவாக ஏற்பட்ட தேறிய திரவத்தன்மை உட்செலுத்தல்கள் மற்றும் இக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அந்நியச் செலாவணி கொள்வனவு/ விற்பனைப் பரிமாற்ற ஏற்பாடுகள் என்பன இத்திரவத்தன்மை மிகைக்குப் பிரதான காரணமாக அமைந்தன. அதேவேளை, வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்காக மத்திய வங்கியிடமிருந்தான அரசாங்கத்தின் அந்நியச் செலாவணிக் கொள்வனவுகள், மத்திய வங்கியின் திறைசேரி முறிக் கையிருப்புகளின் முதிர்ச்சிகள் மற்றும் மத்திய வங்கியின் திறைசேரி முறிக் கையிருப்புகளுக்கான கூப்பன் கொடுப்பனவுகள் என்பன உள்நாட்டுப் பணச் சந்தையில் ரூபாய் திரவத்தன்மையில் குறைவுக்கு வழிவகுத்தன. அண்மைக் காலத்தில், பிரதானமாக அரசாங்கம் அதன் வெளிநாட்டுக் கடனைத் தீர்ப்பனவு செய்வதற்காக மத்திய வங்கியிடமிருந்து அந்நியச் செலாவணி கொள்முதல் செய்ததன் காரணமாக யூலை மாதத்தில் ஓரிரவுத் திரவத்தன்மை சராசரியாக ரூ. 100 பில்லியனுக்கும் குறைவாகச் சரிவடைந்தது.

பங்கேற்பு நிறுவனங்களிடையேயான மிகையான திரவத்தன்மை நிலைமைகளின் காரணமாக, 2025 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் பணச் சந்தைகள் மேம்பட்ட நடவடிக்கைகளைப் பிரதிபலித்தன. 2025 யூலையின் பிற்பகுதியில் சிறிதளவு உயர்வு காணப்பட்ட போதிலும், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது ஓரிரவு கொள்கை வீதத்திற்கமைய பரந்தளவில் இசைந்து காணப்பட்டதுடன்

சராசரி நிறையேற்றப்பட்ட மீள்கொள்வனவு வீதமும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பணவீதத்தின் அசைவுகளுடன் இசைந்து நகர்ந்தது.

வரைபடம் 17: ஓரிரவு திரவத்தன்மை மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதத்தின் நடத்தை



குறிப்பு: வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையில் பரிமாற்றங்கள் ஏதும் அறிக்கை செய்யப்படாததால் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீத தரவு சில நாட்களில் கிடைப்பனவாகவில்லை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உள்நாட்டுக் கொடுகடன் நிலைமைகள் மற்றும் நாணய நிரம்பல்

2025 இல், தனியார் துறைக் கொடுகடனில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு மற்றும் வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி ஆகியவற்றால் ஆதரவளிக்கப்பட்டு, விரிந்த பணம் (M_{2b}) தொடர்ந்து விரிவடைந்தது.

2025 ஆம் ஆண்டின் இதுவரையிலான காலப்பகுதியில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன், பொருளாதாரத்தின் முக்கிய துறைகளில் பரந்தளவிலான நிரம்பலுடன் தொடர்ந்து விரிவடைந்தது. 2025 சனவரி முதல் மே வரையிலான காலப்பகுதியில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான கொடுகடன் ஏறத்தாழ ரூ. 479 பில்லியன் கொண்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தைப் பதிவு செய்து, 2025 மே மாத இறுதியில் 16.1 சதவீத ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. உண்மை நியதிகளில்[14] தனியார் துறைக்கான கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு விரிவாக்கம் பணச்சுருக்க நிலைமைகளுக்கு மத்தியில் தொடர்ந்தும் உயர்வடைந்து காணப்படுகின்றது. மேலும், நிதிக் கம்பனிகளால் வழங்கப்பட்ட கொடுகடன் ரூ. 228 பில்லியனால் விரிவடைந்த அதேவேளை, உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் வழங்கப்பட்ட கொடுகடன் சிறிதளவு குறைப்பொன்றினை பதிவுசெய்தது.

[14] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் (CCPI, 2021=100) இனை அடிப்படையாகக் கொண்ட பின்னோக்கிச் செலுத்தப்பட்ட பணவீக்கச் சுட்டெண்ணைப் பயன்படுத்தி தனியார் துறைக்கான பெயரளவு (முழுமையான) கொடுகடனை சீராக்கம்செய்வதன் மூலம் தனியார் துறைக்கான உண்மைக் கொடுகடன் கணக்கிடப்படுகின்றது.

வரைபடம் 18: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தனியார் துறைக்கான கொடுகடனின் மாதாந்த மாற்றம்



மூலம்: இலங்கை மத்திய வங்கி

மத்திய வங்கி மற்றும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் ஆகிய இரண்டினாலும் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக, வங்கித்தொழில் முறைமையினால் அரசிற்கான தேறிய கொடுகடனானது 2025 இன் சனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் அதிகரித்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளில் அதிகளவிலான அரச வைப்புத்தொகை இருந்தபோதிலும், அரசப் பிணைய முதலீடுகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது இக்காலப்பகுதியல் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட அரசிற்கான தேறிய கொடுகடனை அதிகரிக்க வழிவகுத்தது. இதேவேளை, முகப்பெறுமதி அடிப்படையில் சிறிதளவு சுருக்கமொன்றைப் பதிவு செய்த போதிலும், மத்திய வங்கியால் வழங்கப்பட்ட அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு மதிப்பீட்டு மாற்றங்களைப் பிரதிபலித்தது.

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் 2025இன் சனவரி முதல் மே வரையான காலப்பகுதியில் சுருக்கமடைந்தமைக்கு இலங்கை உரக் கூட்டுத்தாபனம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை ஆகியவற்றின் தேறிய மீள்கொடுப்பனவுகள் பிரதான காரணமாக அமைந்தன.

மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில், வங்கித் தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2025இன் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் மேம்பட்டன. ஒட்டுமொத்த விரிவாக்கத்திற்கு பங்களிக்கும் வகையில், மத்திய வங்கி அதன் அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்த மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணிக் கொள்வனவுகளால் பெருமளவில் ஆதரவளிக்கப்பட்டு மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் கணிசமாக உயர்வடைந்தன. வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களில் உள்நாட்டில் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகள் இல்லாமையால் வதிவற்றோருக்கான கடன்கள் மற்றும் வெளிநாடுகளில் உள்ள வங்கிகளில் வைத்திருக்கும் நிலுவைகள் பிரதானமாக அதிகரித்ததன் காரணமாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்து அதிகரித்தன.

இவ் அபிவிருத்திகளுக்கேற்ப, விரிந்த பணத்தின் (M_{2b}) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது 2024 ஆம் ஆண்டின் இறுதியில் பதிவான 8.6 சதவீதத்திலிருந்து 2025 மே இல் 9.9 சதவீதமாக அதிகரித்தது.

வரைபடம் 15: விரிந்த பணத்தின் (M_{2b}) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

3.4. வெளிநாட்டுத் துறை

வெளிநாட்டுத் துறையானது இவ் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் தாக்குப்பிடிக்கும் தன்மையுடன் காணப்பட்டது. அத்துடன் நிதியியல் கணக்கின் குறைந்த செயலாற்றத்திற்கு மத்தியிலும், 2025இன் முதலரைப்பகுதியில் நடைமுறைக்கணக்கில் மிகையொன்றைப் பதிவு செய்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் ஐந்தாவது தொகுதிக் கிடைப்பனவுடன் செலாவணி வீதம் பரந்தளவில் நிலையாகக் காணப்படுகின்ற அதேவேளை ஒதுக்கு நிலைமை வலுவடைந்தது.

சென்மதி நிலுவை

நடைமுறைக் கணக்கு 2025இன் முதலரைப்பகுதியில் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் கொண்ட மிகையொன்றைப் பதிவுசெய்தது. இது, முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறையின் குறிப்பிடத்தக்களவு சுருக்கத்துடன் பணிகள் மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்குகளில் ஏற்பட்ட வலுவான செயலாற்றங்களால் முக்கியமாக உந்தப்பட்டது. 2025இன் முதலரைப்பகுதியில் வணிகப்பொருள் வர்த்தகப் பற்றாக்குறையானது ஐ.அ.டொலர் 3.3 பில்லியனுக்கு விரிவடைந்தது. வணிகப்பொருள் ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் அதிகரித்தன. ஏற்றுமதிகளின் வளர்ச்சியானது புடவைகள் மற்றும் ஆடைகள், மற்றும் உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை போன்றவற்றிலிருந்தான உயர்ந்தளவான வருவாய்களால் தூண்டப்பட்ட அதேவேளை இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு முக்கியமாக அதிகரித்த வாகன இறக்குமதிகள் காரணமாயமைந்தது. மேலும், சுற்றுலா வருவாய்களானது நடைமுறைக் கணக்கிற்கு குறிப்பிடத்தக்களவு பங்களித்ததுடன் கிட்டத்தட்ட 1.2 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளால் ஆதரவளிக்கப்பட்டு 10 சதவீத அதிகரிப்பை பதிவுசெய்தது. தொழிலாளர் பணவனுப்பல்களும் கிட்டத்தட்ட 19 சதவீதம் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து ஐ.அ.டொலர் 3.7 பில்லியன் வலுவான வளர்ச்சியைக் காண்பித்தது. ஒட்டுமொத்தமாக

நோக்கின், வலுவான வணிகப்பொருள் அல்லாத வர்த்தக உட்பாய்ச்சல்களும் பல்வேறு வருமானக் கூறுகளின் மேம்பாடுகளும் நடைமுறைக் கணக்கு நிலைமையை வலுப்படுத்துவதில் குறிப்பிடத்தக்களவு பங்களித்தன.

மாறாக, நிதியியல் கணக்கின் செயலாற்றம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் குறைவடைந்து காணப்பட்டது. 2025இன் முதலாம் காலாண்டுப்பகுதியில் நேரடி முதலீட்டு தொழில்முயற்சிகளுக்கான வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடங்கலாக வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் முன்னைய ஆண்டின் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் மேம்பாட்டொன்றைக் காண்பித்தாலும் ஒட்டுமொத்தமாக மிதமடைந்து காணப்பட்டன. அதேவேளை, அரசப் பிணையங்கள் சந்தையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் 2025இன் முதலரைப்பகுதியில் மிதமடைந்த தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தைப் பரிவர்த்தனைகள் உள்ளடங்கலாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள், 2025 சனவரி முதல் யூன் வரையான காலப்பகுதிகளில் சிறிதளவான தேறிய வெளிப்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.

வரைபடம் 20: வணிகப்பொருள் வர்த்தகக் கணக்கு



மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

வரைபடம் 21: சுற்றுலாத்துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள்



மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
உரிமம் பெற்ற வங்கிகள்

வரைபடம் 22: நடைமுறைக் கணக்கு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 23: நிதியியல் கணக்கு



மூலம்: இலங்கை மத்திய வங்கி

2025 சனவரியில் வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதுடன், 2025 ஏப்பிறலிருந்து வாகன இறக்குமதியில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இதற்கமைய, தனியாள் மற்றும் வணிக நோக்குடைய வாகன இறக்குமதிகள் உள்ளடங்கலாக வாகன இறக்குமதிகளுக்கான செலவினமானது 2025ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் உயர்வடைந்து ஐ.அ.டொலர் 475 மில்லியனை அடைந்தது. வாகனங்களுக்கான கேள்வி தற்போது மேல்நோக்கிய போக்கில் இருந்தாலும், தேங்கி நிற்கும் கேள்வியால் ஏற்படும் தற்போதைய எழுச்சி குறைந்தவுடன் அது நிலைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வரைபடம் 24: தனியாள் மற்றும் வணிக நோக்கிலான வாகனங்களின் உள்ளடக்கம்



மூலம்: இலங்கைச் சுங்கம்

செலாவணி வீதம்

வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமைக்கும் இறக்குமதிகள் அதிகரித்தமைக்கும் மத்தியில், 2025 யூலை 22 இலுள்ளவாறு இலங்கை ரூபாவானது ஐ.அ.டொலரிற்கெதிராக 3.1 சதவீத மிதமான தேய்மானத்தைப் பதிவுசெய்தது. மேலும், ரூபாவானது பல முக்கிய நாணயங்களுக்கெதிராக தேய்மானமடைந்து ஐ.அ.டொலரிற்கெதிராக இவ் நாணயங்களின் பரந்தளவிலான உறுதித்தன்மையினைப் பெரும்பாலும் பிரதிபலித்தது. யூலை 22 வரையான ஆண்டின் காலப்பகுதியில் தேய்மானத்தைப் பிரதிபலித்து பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம் மற்றும் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் ஆகிய இரண்டும் குறைவடைந்தன. இதற்கமைய, 5-நாணய பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 7.6 சதவீதத்தினாலும் 5-நாணய உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண் 7.4 சதவீதத்தினாலும் குறைவடைந்தன.

வரைபடம் 25: செலாவணி வீத அசைவுகள்



குறிப்பு: 22 யூலை 2025 அன்று கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையிலமைந்தது

மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஒதுக்குச் சொத்துக்கள்

உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவுகள் தொடர்ந்த போதிலும் அரசப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் முக்கிய காரணமாக, 2025 மாச்சில் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 6.5 பில்லியனுக்கு உயர்வடைந்திருந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்[15] 2025 யூன் மாத இறுதியில் கிட்டத்தட்ட ஐ.அ.டொலர் 6.1 பில்லியனுக்கு மிதமடைந்தது. 2025 யூலை 22 வரையான ஆண்டின் காலப்பகுதியில் மத்திய வங்கியானது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து தேறிய அடிப்படையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.1 பில்லியனைக் கொள்வனவு செய்தது. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 350 மில்லியன் தொகையான ஐந்தாம் தொகுதியின் கிடைப்பனவும் மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரிக்க உதவியது.

வரைபடம் 26: மாதாந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஒதுக்கு போதுமாந்தன்மை மற்றும் தேறிய உள்ளீர்ப்பு





குறிப்பு: மாதாந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் பயன்படுத்தத்தக்க நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியின் நாணயப் பரஸ்பர பரிமாற்றல் வசதி ஏற்பாட்டிலிருந்தான பெறுகைகளை உள்ளடக்குகின்றன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

3.5. இறைத் துறை

வருவாய் அடிப்படையிலான இறைத்திரட்சி வழிமுறைகளுக்கான அரசாங்கத்தின் வலுவான அர்ப்பணிப்பு காரணமாக 2025 சனவரி தொடக்கம் மே மாத காலப்பகுதியில்[16] இறைத்துறைச் செயலாற்றம் தொடர்ந்தும் முன்னேற்றமொன்றைக் காண்பித்தது. இத்தகைய வழிமுறைகள் இக்காலப் பகுதியில் கணிசமான ஆரம்ப மிகைக்கும் குறைவடைந்த ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைக்கும் வழிவகுத்தன.

2025 சனவரி தொடக்கம் மே மாத காலப்பகுதியில் தொடர்ச்சியான வலுவான இறைத் திரட்சி வழிமுறைகளானது அனைத்து முக்கிய இறை மீதிகளையும் அதாவது, ஒட்டுமொத்த இறை மீதி,

[15] பயன்பாட்டிற்கான நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்குகின்றது.

[16] நிதி அமைச்சிடமிருந்து பெறப்பட்ட தற்காலிக தரவுகளின்படி, 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் காணப்பட்ட ரூ. 1,865 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 2025 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் மொத்த வருவாய் மற்றும் கொடைகள் 24.7 சதவீதத்தால் ரூ. 2,325 பில்லியனுக்கு அதிகரித்தது. அதேபோன்று, 2025 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் மொத்த செலவினமானது 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 10.9 சதவீதத்தால் ரூ. 2,731 பில்லியனுக்கு அதிகரித்தது. முதன்மை மிகையானது ரூ. 859 பில்லியனாக குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவு செய்த அதேவேளை 2025 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை ரூ. 406 பில்லியனாகச் சுருக்கமடைந்தது.

நடைமுறைக் கணக்கு மீதி மற்றும் ஆரம்ப மீதி என்பவற்றையும் பெயரளவு நியதிகளிலும் எறிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் பங்காகவும் முன்னேற்றமடையச் செய்துள்ளது. இதற்கமைய, ஆரம்ப மீதி ரூ. 742.9 பில்லியன் குறிப்பிடத்தக்க மிகையை பதிவுசெய்த வேளையில், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் ஒட்டுமொத்த இறைப் பற்றாக்குறை ரூ. 236.6 பில்லியனாகச் சுருக்கமடைந்தது.

2025 சனவரி தொடக்கம் மே மாத காலப்பகுதியில், அரசாங்கத்தின் மொத்த அரசிறை மற்றும் கொடைகள் 2024இன் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது முக்கியமாக பெறுமதி கூட்டப்பட்ட வரி, வருமான வரிகள் மற்றும் கலால் தீர்வைகளிலிருந்தான அதிகளவிலான வரி வருமானங்களாலும் தூண்டப்பட்டதுடன் வரிக்கொள்கைச் சீர்திருத்தங்களின் விளைவையும் பொருளாதார நடவடிக்கைகளின் மீட்சியையும் பிரதிபலிக்கின்றது. 2025 ஆம் ஆண்டில் வருமான அதிகரிப்பின் குறிப்பிடத்தக்க பகுதி மோட்டார் வாகன இறக்குமதிகள் தொடர்பான வரி சேகரிப்புக்களிலிருந்து பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு மேலதிமாக, இவ்வரி வருமான வளர்ச்சி வேகத்தை நடுத்தர காலத்தில் நிலைநிறுத்துவதற்கு இன்றியமையாததாக இருக்கும் வருமானத்தை சேகரிக்கும் முகவராண்மைகளில் வரி நிர்வாகம் மற்றும் நிறுவன சீர்திருத்தங்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உரிய வேளையில் அமுல்படுத்துவதன் மூலம் வரி வருமானத்தின் ஒட்டுமொத்த அதிகரிப்பு மேலும் துணையளிக்கப்பட்டிருக்கலாம். இக்காலப்பகுதியில், வட்டி வருமானத்தின் அதிகரித்த கிடைப்பனவுகள் அதேபோன்று தண்டப்பணங்கள், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் போன்றன காரணமாக வரி அல்லாத வருமானமும் வளர்ச்சியடைந்தது. அதேவேளை, 2025 சனவரி தொடக்கம் மே மாத காலப்பகுதியில், மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும் ஆண்டுக்காண்டு 9.7 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தன. மானியங்கள் மற்றும் மாற்றல்கள், சம்பளம் மற்றும் ஊதியங்கள் மற்றும் மறுசீரமைக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மீது செலுத்தப்படும் வட்டி உள்ளிட்ட வட்டிக் கொடுப்பனவுகள் மீதான அதிக செலவினங்கள் இவ்அதிகரிப்புக்கு பிரதானமாக உந்துதளித்தது. எனினும், 2024 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், மதிப்பாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் சிறிதளவு சரிவைப் பதிவு செய்தன.

வரைபடம் 27: முக்கிய இறை மீதிகள்



மூலம்: நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

இவ்வேளையில் பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகாமையினால் 2025 சனவரி தொடக்கம் மே மாத காலப்பகுதியின் போது, வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கம் முதன்மையாக உள்நாட்டு மூலங்களிலேயே தொடர்ந்து தங்கியிருந்தது.

3.6. நிதியியல் துறை

சாதகமான உள்நாட்டுப் பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் கொடுகடன் வளர்ச்சிக்கு ஆதரவளித்த தளர்வான நிதி நிலைமைகள் ஆகியவற்றினால் நிதியியல் துறை செயலாற்றம் தொடர்ந்து மேம்பட்டது.

தனியார் துறை மொ.உ.உற்பத்திற்கான கொடுகடன் இடைவெளி (கொடுகடன் இடைவெளி) மூலம் பிரதிபலிக்கப்படுகின்ற கொடுகடன் சுழற்சியானது விரிவாக்க கட்டத்தினுள் முன்னேற்றமடைந்தது. தற்போதைய இறைத் திரட்சி வழிமுறைகளுக்கு மத்தியில் தனியார் துறைக்கான கொடுகடன் அதிகரிப்பினால் ஆதரவளிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கும் அரச துறை நிறுவனங்களுக்குமான நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படுத்துகையில் ஏற்பட்ட சாய்வுநிலை தொடர்ந்து சரி செய்யப்பட்டது.

வரைபடம் 28: மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கொடுகடன் இடைவெளி



மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 29: பொது மற்றும் தனியார் துறைகளுக்கான நிதியியல் துறை வெளிப்படுத்துகை



குறிப்பு: அரச மற்றும் தனியார் துறைகளுக்கான வங்கித் தொழில் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வெளிப்படுத்துகையை இது பிரதிபலிக்கின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பேரண்டப்பொருளாதார நிலைமைகள் மேம்பட்டமைக்கு மத்தியில் 2025ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் நிதியியல் துறையின் தாக்குப்பிடிக்கும்தன்மை படிப்படியாக மேம்பட்டது. அதிகரித்த முதலீடுகள், கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பனவற்றின் முக்கியமாக காரணமாக மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் விரிவடைந்தன. இதற்கமைய, 2025ஆம் ஆண்டின் யூன் இறுதியில் மொத்த சொத்துக்கள் ஆண்டுக்கு ஆண்டு 14.9 சதவீத வளர்ச்சியைப் பதிவுசெய்து ரூ. 23.8 டிரில்லியனாகக் காணப்பட்டது. மேலும், தளர்வடைந்த நாணயக் கொள்கை நிலைமைகளுக்கு மத்தியில் மொத்த கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் வளர்ச்சியானது 2025ஆம் ஆண்டின் யூன் இறுதியில் ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 11.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்தன.

வங்கித்தொழில் துறையின் செயற்படாக் கடன்கள் விகிதமானது, நிலை 3 கடன்கள் விகிதத்தின் மூலம் பிரதிபலிக்கப்படும், 2024 யூன் இறுதியில் பதிவான 12.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025 யூன் இறுதியில் 12.0 சதவீதமாகக் குறைவடைந்தது. இருப்பினும் உயர்ந்த மட்டத்திலேயே காணப்பட்டது. இத்துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2024ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் கணிசமாக அதிகரித்தது. இதற்கமைய, 2024ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் காணப்பட்ட ரூ. 112.3 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2025ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் ரூ. 187.5 பில்லியனை வரிக்குப் பின்னரான இலாபமாக வங்கிகள் பதிவுசெய்துள்ளன. வங்கித்தொழில் துறையின் இலாபக் குறிகாட்டிகளைப் பொறுத்தவரை, 2025 ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில் பங்குரிமை மீதான வருவாய் மேம்பட்ட அதே வேளை, சொத்துக்கள் மீதான வருவாய் அதே மட்டத்தில் காணப்பட்டது.

திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்களால் அளவிடப்படும் வங்கித்தொழில் துறையின் திரவத்தன்மை, முன்னைய ஆண்டின் யூனுடன் ஒப்பிடுகையில் 2025இன் அதே காலப்பகுதியில் சிறிதளவு குறைவடைந்தது. அதன்படி, ரூபாய் திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதமானது 2024 யூனில் காணப்பட்ட 339.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025 யூனில் 328.6 சதவீதமாக குறைவடைந்தது. அதேவேளை, அனைத்து நாணய திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்கள் 2024 யூனில் 293.4 சதவீதமாக காணப்பட்ட நிலையில், 2025 யூனில் 283.1 சதவீதமாகச் குறைவடைந்தது. இருப்பினும், துறை திரவத்தன்மைக் காப்பீட்டு விகிதங்கள் குறைந்தபட்ச தேவைப்பாடுகளை விட அதிகமாக காணப்பட்டன. அதேவேளை, இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் மொத்த ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட அதிக வளர்ச்சியால் ஆதரவளிக்கப்பட்டு, முன்னைய ஆண்டின் 17.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் வங்கித்தொழில் துறையின் மொத்த மூலதன போதுமை விகிதமானது 2025 மாச்சு இறுதியில் 19.3 சதவீதமாக மேம்பட்டது. இதற்கமைய, வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனம் 2025 மாச்சு இறுதியில் 19.0 சதவீத குறிப்பிடத்தக்க ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இது, வெளியிடப்பட்ட பிடித்துவைக்கப்பட்ட வருவாய்கள், தகுதிவாய்ந்த அடுக்கு-2 மூலதன சாதனங்கள் மற்றும் பொது ஒதுக்குகள் என்பவற்றின் அதிகரிப்புக்களினாலும் தேறிய பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்களில் ஏற்பட்ட சரிவினாலும் தூண்டப்பட்டு துறையின் மூலதன தாங்கியிருப்புக்களின் அதிகரிப்பை எடுத்துக்காட்டுகின்றது.

நிதியியல் கம்பனிகள் துறையும் அதிகரித்த கடன்கள் மற்றும் முற்பணங்களால் ஆதரவளிக்கப்பட்டு அதன் சொத்துத் தளத்தில் 25.8 சதவீத ஆண்டுக்கு ஆண்டு விரிவாக்கத்தை 2025 யூன் இறுதியில் பதிவுசெய்தது. இதற்கமைய, பிரதானமாக வாகனக் கடன்கள், நிதிக் குத்தகைகள் மற்றும் தங்கக் கடன்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பால் இத்துறையின் கடன்கள் மற்றும் முற்பணங்கள் சொத்துப்பட்டியல் 2025 யூன் இறுதியில் 35.1 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

இத்துறையின் மொத்த செயற்படாக் கடன் விகிதம் 2024 யூன் இறுதியின் 13.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025 யூன் இறுதியில் 8.3 சதவீதமாகக் குறைவடைந்து, கொடுகடன் தரத்தில் முன்னேற்றமொன்றைக் குறிக்கிறது. இருப்பினும், நிதியியல் கம்பனிகள் துறையின் கொடுகடன் சொத்துப்பட்டியலானது வாகனங்கள் மற்றும் தங்கத்தின் மீதான கடன்களில் அதிக அளவில் கவனம்செலுத்தியது. இத்துறையின் திரவத்தன்மை நிலைமையானது ரூ. 114.6 பில்லியன் திரவத்தன்மை மிகையுடன் 2025 யூன் இறுதியில் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டினை விட அதிகமாக காணப்பட்டது. மேலும், இத்துறையானது 2025/26 நிதியாண்டின் முதலாவது காலாண்டான 2025 ஏப்பிறல் - யூன் காலப்பகுதியில் ரூ. 18.0 பில்லியன் வரிக்குப் பிந்தைய இலாபத்தைப் பதிவுசெய்தது. மூலதனப் போதுமான தன்மை நியதியில், நிதியியல் கம்பனிகள் துறையானது 2025 யூன் இறுதியளவில் 22.0 சதவீத மூலதனப் போதுமை சதவீதத்தைப் பதிவுசெய்தது.

கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ரான்டட் மற்றும் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண்கள் 2025 யூன் இறுதியில் ஆண்டு முதல் இன்றுவரையான வளர்ச்சி வீதங்கள் முறையே 13.1 சதவீதம் மற்றும் 10.1 சதவீதத்தை அடைந்துடன் பங்குரிமைச் சந்தையானது குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் காட்டியது. தளர்வடைந்த நாணய நிலைமைகளுக்கு மத்தியில் மேம்பட்ட நிறுவன மற்றும் பொருளாதார செயலாற்றம் மற்றும் தோற்றப்பாட்டைக் கருத்திற்கொண்டு, உள்நாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த பங்கேற்பின் முக்கிய காரணமாக இவ் மேல்நோக்கிய போக்கு உயர்வடைந்தது.

3.7. உலகளாவிய அபிவிருத்திகள்

அண்மைய அமெரிக்கத் தீர்வை அறிவிப்புக்கள் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தின் மீதான அவற்றின் தாக்கத்திற்கு மத்தியில், அதிகரித்த உலகளாவிய கொள்கை உறுதியற்ற தன்மை, உலகளாவிய பொருளாதார வாய்ப்புகள் மற்றும் சந்தை உணர்வுகளை குறிப்பிடத்தக்களவு பாதித்தன. புவிசார் அரசியல் பதற்றங்கள் மீண்டும் எழுந்துள்ளதால், உலகளாவிய பண்டங்களின் விலைகளுக்கான தோற்றப்பாடு தளம்பல்மிக்கதாகவும் உறுதியற்றதாகவும் காணப்படுகின்றது. இதற்கு பதிலிறுத்தும் விதமாக, பல நாடுகளில் புதுப்பிக்கப்பட்ட வர்த்தகப் பதற்றம் கொள்கைப் பேச்சுவார்த்தைகளில் ஒரு முக்கிய அம்சமாக காணப்படுவதுடன் முக்கிய மத்திய வங்கிகள் முன்னெச்சரிக்கையான நாணயக் கொள்கை தளர்த்தலை நோக்கி நகர்வதை குறித்துக்காட்டியுள்ளன.

அமெரிக்கத் தீர்வை அறிவிப்புகளுக்கு மத்தியில் அதிகரித்து வரும் பொருளாதார மற்றும் வர்த்தகக் கொள்கையின் உறுதியற்ற தன்மையால் உலகளாவிய வளர்ச்சி பாதிக்கப்பட வாய்ப்புள்ளது. மேலும், தொடர்ச்சியான புவிசார் அரசியல் பதற்றங்கள் எதிர்வரும் காலத்தில் உலகளாவிய வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய இடர்நேர்வொன்றாகக் காணப்படுகின்றன. [17]உயர்வடைந்த வினைத்திறன்மிக்க அமெரிக்கத் தீர்வைகள், முன்னேற்றமடைந்த மற்றும் வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களின் மீதான விகிதாசாரமற்ற தாக்கத்துடன் உலகளாவிய வர்த்தக வளர்ச்சியைப் பாதிக்கக்கூடும். ஐக்கிய அமெரிக்காவில் பணவீக்கம் சிறிதளவு அதிகரித்துள்ள அதேவேளை யூரோ பகுதி உட்பட பல பொருளாதாரங்கள் பணவீக்கத் தளர்த்தலை கொண்டிருந்ததுடன் உலகளாவிய பணவீக்கமானது கலவையான சமிக்ஞைகளை வழங்குகின்றது. இருப்பினும், ஒட்டுமொத்த உலகளாவிய

[17]2025 யூலை 29 ஆம் திகதி அன்று வெளியிடப்பட்ட பன்னாட்டு நாணய நிதியத்தின் உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் அண்மைய இற்றைப்படுத்தலின்படி, உலகளாவிய வளர்ச்சியானது 2024இல் 3.3 சதவீதத்திலிருந்து 2025இல் 3.0 சதவீதமாக மெதுவடைந்து 2026இல் 3.1 சதவீதமாக சிறிதளவு மேம்படும் என்று எறிவுசெய்யப்படுகின்றது. அண்மைய எதிர்வுகூறல் வளர்ச்சியானது 2025 ஏப்பிறல் அடிப்படை எதிர்வுகூறலை விட உயர்வாக இருந்தாலும், அது கொவிட்டிற்கு முன்னரான சராசரியை விடக் குறைவாகக் காணப்படுகின்றது.

பணவீக்கமானது குறைவடைந்த கேள்வி நிலைமைகள் மற்றும் வீழ்ச்சியடைகின்ற வலு விலைகள்[18] போன்றவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு 2025ஆம் ஆண்டில், பெரும்பாலும் மிதமானதாகக் காணப்படும்.

அதன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களிடமிருந்தான இறக்குமதிகளின் மீதான அதிகரித்த அமெரிக்கத் தீர்வைகள் வர்த்தகப் பழிவாங்குதல், நிரம்பல் சங்கிலி இடையூறுகள் மற்றும் அதிகரித்த உலகளாவிய உற்பத்திச் செலவுகள் போன்ற அச்சங்களைத் தூண்டியுள்ளன. இது, 2025 ஏப்பிறலில் உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மைச் சுட்டெண் இதுவரை இல்லாத அளவுக்கு உயர்ந்தமைக்கு வழிவகுத்தது. அதேவேளை, முன்னேற்றமடைந்த பொருளாதாரங்கள் தொடர்ச்சியான பற்றாக்குறைகளுக்கு மத்தியில் அதிகரித்து வரும் படுகடன் தீர்ப்பனவுச் செலவுகள் குறித்து அதிகளவு கரிசனையுடன் காணப்படுகின்றன. இந் நிச்சயமற்ற தன்மைக்கு மேலதிகமாக, அதிகரித்து வரும் புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பிராந்திய மோதல்கள் உலகளாவிய பொருளாதாரத் தோற்றப்பாட்டைத் தொடர்ந்து பாதிக்கும் காரணிகளாக விளங்குகின்றன.

வரைபடம் 30: உலகளாவிய பொருளாதாரக் கொள்கை நிச்சயமற்றதன்மைச் சுட்டெண்



மூலம் : fred.stlouisfed.org

2025ஆம் ஆண்டில் பல நாடுகள் தங்கள் நாணயக் கொள்கை நிலைப்பாட்டைத் தளர்த்தியிருந்தாலும், உயர்வடைந்த உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கு மத்தியில் மத்திய வங்கிகள் மேலதிக நடவடிக்கை எடுப்பதில் அவதானத்துடனுள்ளன. பணவீக்கமானது இலக்கை விட உயர்வாகக் காணப்படுகின்றமையாலும் அண்மைய தீர்வை அதிகரிப்புக்கள் மற்றும் இறுக்கமான நிதியியல் நிலைமைகள் என்பனவற்றின் காரணமாக உயர்வடைந்த நிச்சயமற்ற தன்மையாலும், 2025ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் பெடரல் நிதிய வீதத்தை மாற்றமடையாமல் பேணியது. மேலும், அமெரிக்க பெடரல் ரிசேர்வ் நடத்திய கணியம்சார் இறுக்கமடைதல் திட்டம் நிறைவடையும் தருணத்தில் இருப்பதுடன் கணியம்சார் இறுக்கமடைதலின் வேகம் கணிசமாகக் குறைந்துள்ளது. இருப்பினும், அதிகாரிகளின் டாட்-ப்ளாட் எறிவுகள் ஆண்டின் மீதமுள்ள காலப்பகுதியில் இரண்டு சாத்தியமான வீதக் குறைப்புகளைக் குறிக்கின்றன[19]. 2025ஆம் ஆண்டில் இதுவரையான

[18] பணவீக்க எதிர்வுகூறலில் காணப்படும் நாடுகளுக்கிடையிலான வேறுபாடுகளுடன் உலகளாவிய பணவீக்கமானது 2024இல் 5.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2025இல் 4.2 சதவீதமாகவும் 2026இல் 3.6 சதவீதமாகவும் இருக்குமென எறிவுசெய்யப்பட்டுள்ளது.

[19] ஐக்கிய அமெரிக்க பெடரல் ரிசேர்வ் ஆனது 2025 யூலையில் அதன் 5ஆவது பெடரல் திறந்த சந்தைக் குழுக் கூட்டத்தில் பெடரல் நிதிய வீதத்தை 4.25-4.50% இல் தொடர்ந்து பேணியது.

காலப்பகுதியில் ஐரோப்பிய மத்திய வங்கியானது அதன் முக்கிய வட்டி வீதத்தை நான்கு தடவைகள் குறைப்பதன் மூலம் நாணயக் கொள்கையைத் தொடர்ந்து தளர்த்தியது[20]. பணவீக்கம் தளர்த்தப்படுவதையும் உள்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மந்தநிலையையும் காரணம் காட்டி, இங்கிலாந்து வங்கி 2024 ஓகத்திலிருந்து நாணயக் கொள்கையை படிப்படியாகத் தளர்த்தியுள்ளது. இருப்பினும், உலகளாவிய நிச்சயமற்ற தன்மை மற்றும் பணவீக்கம் இலக்கை விட உயர்வாகக் காணப்படுகின்றமை என்பனவற்றின் காரணமாக இங்கிலாந்து வங்கி கொள்கை வீதங்களை 2025 யூனில் நிலையாக வைத்திருந்தது[21]. யப்பான் வங்கியானது சனவரி மாதத்தில் வட்டி வீத உயர்வைத் தொடர்ந்து, 2025 யூனில் அதன் குறுகிய கால கொள்கை வட்டி வீதத்தை மாற்றாமல் வைத்திருந்தமை உயர்வடைந்த உலகளாவிய வர்த்தக பதற்றங்களையும் பணவீக்கம் குறித்த எச்சரிக்கையான கண்ணோட்டத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. யப்பான் வங்கியின் தீர்மானமானது எச்சரிக்கையான நிலைப்பாட்டை பிரதிபலிப்பதுடன் நிச்சயமற்ற தன்மை குறைந்து பணவீக்கப் போக்கு அதன் இலக்குடன் உறுதியாக இணைந்தவுடன் வீத உயர்வுகளை மீண்டும் தொடங்குவதற்கான தெரிவைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, அரசப் பிணையங்களைக் கொள்வனவுசெய்வதைக் குறைக்கும் திட்டத்தை யப்பான் வங்கி அறிவித்துள்ளது. மேலும், வளர்ந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களின் மத்திய வங்கிகளின் நாணயக் கொள்கை நிலைப்பாடு கலப்பானதாகக் காணப்பட்டு மாறுபட்ட உள்நாட்டு பணவீக்க இயக்கவாற்றல்கள், செலாவணி வீத அழுத்தங்கள் மற்றும் வளர்ந்து வரும் உலகளாவிய பொருளாதார நிச்சயமற்ற தன்மைக்கான மாறுபட்ட பதிலிறுப்புக்கள் என்பனவற்றைப் பிரதிபலிக்கின்றது. எதிர்காலத்தில், உயர்வான நிச்சயமற்ற தன்மையிற்கும் வர்த்தக செலவுகளில் ஏற்பட்ட ஆரம்ப உயர்வுகள் பரந்தளவிலான விலை மற்றும் கூலி அழுத்தங்களுக்கு வழிவகுக்கும் சாத்திப்பாட்டிற்கும் மத்தியில் மத்திய வங்கிகள் எச்சரிக்கையுடன் செயல்படலாம். நாடுகளிடையே இடர்நேர்வுத் தோற்றப்பாடு வேறுபடும்: அதிகரித்த நிச்சயமற்ற தன்மை மற்றும் பலவீனமான ஏற்றுமதிகள் என்பனவற்றின் எதிர்மறைத் தாக்கங்களால் பெரும்பாலான கொள்கைத் தீர்மானங்கள் வடிவமைக்கப்படலாம், அதேவேளை அதிக தீர்வைகளை அமுல்படுத்தும் நாடுகளில், முக்கிய கரிசனையானது அதிகரித்து வரும் பணவீக்க அழுத்தங்களை நோக்கி மாற்றமடையலாம்.

வரைபடம் 31: உலகளாவிய கொள்கை வீத மாற்றங்கள்



குறிப்பு: 22 யூலை 2025 அன்று கிடைக்கப்பெற்ற தரவுகளின் அடிப்படையிலமைந்தது மூலம் : https://www.cbrates.com

[20] 2025 யூலை 24 அன்று நடைபெற்ற ஆளும் சபைக் கூட்டத்தில், மூன்று பிரதான ஐரோப்பிய மத்திய வங்கி வட்டி வீதங்களை மாற்றமடையாமல் வைத்திருக்க ஐரோப்பிய மத்திய வங்கி முடிவு செய்தது.

[21] ஐரோப்பிய வங்கியானது 2025 ஓகத்தில் நடைபெற்ற நாணயக் கொள்கைக் கூட்டத்தில் வங்கி வீதத்தை 0.25 சதவீதப் புள்ளிகளால் 4 சதவீதமாகக் குறைத்தது.

உலகளாவிய உணவுப் பண்டங்களின் விலைகளின் போக்கானது கேள்வி மற்றும் நிரம்பல் பக்க அழுத்தங்கள் ஆகிய இரண்டினதும் செல்வாக்குக்குட்பட்டு அண்மைக் காலமாக தளம்பல் நிலையிலேயே காணப்பட்டுள்ளது. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச் சுட்டெண் 2024ஆம் ஆண்டின் இறுதியில் பதிவு செய்யப்பட்ட 127.4 புள்ளிகளிலிருந்து 2025 யூனில் 128.0 புள்ளிகளாக சிறிதளவு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கியமாக, வலுவான கேள்விக்கு மத்தியில் உலகளாவிய நிரம்பல் இறுக்கமாக இருப்பதன் காரணத்தினால் இறைச்சி மற்றும் பால் பொருட்களின் விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாயமைந்தது. தானியங்கள், எண்ணெய் மற்றும் சீனி விலைச் சுட்டெண்களில் ஏற்பட்ட சரிவானது ஏனைய துணைச் சுட்டெண்களில் ஏற்பட்ட அதிகரிப்பை ஓரளவு ஈடுசெய்திருந்தது. அதேவேளை, மத்திய கிழக்கில் அதிகரித்த புவிசார் அரசியல் பதற்றங்களுக்கு மத்தியில் நிரம்பலின் நிச்சயமற்ற தன்மைகளால் உந்தப்பட்டு, 2025இன் முதலரைப்பகுதியின் இறுதியளவில் உலகளாவிய வலு விலைகள் சில மேல்நோக்கிய அழுத்தத்தை எதிர்கொண்டன. இருப்பினும், இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து யூன் மாத இறுதியளவில் விலைகள் உறுதியடைந்தன.

வரைபடம் 32: உலகளாவிய பண்ட விலைகள்

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் உணவு விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்



மூலம்: உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

உலகளாவிய வலு விலைகளின் மாதாந்த சராசரி அசைவுகள்



மூலங்கள்: ரெபினிட்டிவ் (reuters.com), புளூம்பர்க் மற்றும் சவுதி அராம்கோ

ISBN 978-624-6764-10-4